விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 277 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 06 திங்கட்கிழமை (22.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT BBA(Hons)
(C-3932)
OCTOBER INTAKE | 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
☎ 021 7534 807

## ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி கோரி ஜெனிவாவில் ஒலித்த குரல்

### ஜனாதிபதி அநுரவிலும் கடும் அதிருப்தி

(ஜெனிவா)

ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வில், உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களும் நீதி கோரி இலங்கையர் ஒருவரால் குரல் எழுப்பப்பட்டுள்ளது.

கொழும்பு ஷங்க்ரி-லா விருந்தகத்தில் 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்ட விருந்தக ஊழியரான 20 வயதுடைய விஹங்க தேஜந்த என்பவரின் தந்தையான சுராஜ் நிலங்கவினால் இந்தக் கோரிக்கை முன் வைக் கப் 15ஆம் பக்கம் பார்க்க

## மின்சார சபை ஊழியர்களின் போராட்டம் தீவிரமடைகிறது

(கொழும்பு)

நாளுக்கு நாள் மின்சார சபை ஊழியர்களின் போராட்டம் தீவிரமடைந்து வருகின்றது.

இந்நிலையில் நேற்று நள்ளிரவு முதல் கொள்முதல் மற்றும் டெண்டர் செயல்முறைகளில் விலகி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக இலங்கை மின்சார சபை தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு செயற்பாட்டில் முறைசாரா முன்மொழிவுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அதன் ஊழியர்கள் கடந்த 17 நாட்களாக சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அதன் ஓர் அங்கமாக தொழிற்சங்க நடவடிக்கையை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் 15ஆம் பக்கம் பார்க்க

### பிரித்தானியா உள்ளிட்ட இணை அனுசரணை நாடுகளின்

## புதிய பிரேரணையை அமுலாக்கினால்

## நாடு பிளவுறும் : நல்லிணக்கம் குலையும்

### வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்



(கொழும்பு)

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பிரித்தானியா உள்ளிட்ட இணை அனுசரணை நாடுகளால் தாக்கல் செய்யப்பட்ட புதிய பிரேரணையை அமுல்படுத்தினால் நாடு பிளவுபடும், நல்லிணக்கம் சீர்குலையும். எனவே எம்மால் அதை ஏற்கவே முடியாது என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரக் கட்டணம் அதிகரிக்க வாய்ப்பு

(கொழும்பு)

ஒக்ரோபர் முதல் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குள் மின்சாரக் கட்டணம் 6.8 சத வீதத்தால் அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை மின்சார சபை தற்போது நட்டத்தில் இயங்குவதாகக் கூறி, 15ஆம் பக்கம் பார்க்க

## துப்பாக்கிகளுடன் குடும்பஸ்தர் கைது

### புதுக்குடியிருப்பில் சம்பவம்

(திம்பிலி)

புதுக்குடியிருப்பு திம்பிலியில் சட்டவிரோத துப்பாக்கியுடன் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 15ஆம் பக்கம் பார்க்க

## பெறுமதியான மரக்குற்றிகளை விறகுகளுடன் கடத்தியவர் கைது

### சாவகச்சேரி பொலிஸார் அதிரடி



15ஆம் பக்கம் பார்க்க

### தீர்வை வரி நிவாரணம்

## அமெரிக்காவுடன் பேச்சுத் தொடர்கிறது

(கொழும்பு)

இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான தீர்வை வரிகள் குறித்து நிவாரணம் பெறும் நோக்கில் வர்த்தக அமைச்சு, அமெரிக்காவுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 02ஆம் பக்கம் பார்க்க

## மந்திரிமனையை பாதுகாக்கக் கோரி

### இன்று போராட்டம்

(நல்லூர்)

தமிழர்களுடைய வரலாற்றினையும் தொன்மையையும் எடுத்தியம்பும் முக்கிய மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றான நல்லூர் மந்திரிமனையைப் பாதுகாப்பதற்கு ஆவன செய்ய வலியுறுத்தும் போராட்டம் ஒன்று இன்று 02ஆம் பக்கம் பார்க்க

## அதிகாரமும் மமதையும் கொண்டவர்கள் இப்போது எங்கே?

### சிறீதரன் எம்.பி கேள்வி



(கிளிநொச்சி)

கடந்த காலங்களில் அதிகாரமும் மமதையும் கொண்டிருந்த பலரைக் காலம் காணாமல் ஆக்கியுள்ளது எனப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

வளமான 15ஆம் பக்கம் பார்க்க

## பெண்ணின் வயிற்றில் தங்கம்

(பலாலி)

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக நேற்றைய தினம் (21) பலாலிக்கு வந்த பெண்ணொருவர் த ன து 02ஆம் பக்கம் பார்க்க

### மணல் கடத்தலில் ஈடுபட்ட

## உழவு இயந்திரம் மோதி குடும்பப் பெண் உயிரிழப்பு



(கொடிகாமம்)

கொடிகாமம் கச்சாய் வீதியில் வாகையடிச் சந்தியை அண்மித்த பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம்பெற்ற விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இளைஞர் ஒருவர் படு 02ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் இருப்பை உறுதி செய்ய மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள்

## வடக்கின் உறுப்பினர்கள் கூட்டாகக் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் இருப்பை உறுதி செய்யும் மாகாணசபை முறைமையை விரைவாக நடைமுறைப்படுத்தும் வகையில் தேர்தலை நடத்த வேண்டும் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"வன் டெக்ஸ்ட்" நிறுவனத்தின் அனுசரணையில், மாகாண சபையின் கடந்த கால அனுபவம் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பிலான கருத்தரங்கு நேற்று யாழ். ரில்கோ விடுதியில் நடைபெற்றது.

இதன்பின் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களில் ஈ.பி.ஆர்.எல்.எப் சார்பில் சர்வேஸ்வரன், தமிழரசுக் கட்சி சார்பில் ஆர்னோல்ட், ஈ.பி.டி.பி சார்பில் தவநாதன், புளொட் சார்பில் கஜதீபன், ரெலோ சார்பில் குகதாசன் ஆகியோர் இணைந்து ஊடக சந்திப்பு ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது அவர்கள் மேலும் கூறுகையில், குறிப்பாக அனைத்துக் கட்சிகளுக்கும் சம உரிமை வழங்கி அதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் இன்றைய அரசு மாகாண சபை முறைமையை விரும்பாத ஒன்றாகவே இருக்கின்றது.

கடந்த காலங்களில் இந்த அரசின் நிலைப்பாடு மாகாணசபை முறைமைக்கு எதிரானதாகவே இருந்தது. குறிப்பாகத் தேர்தலை பழைய முறையிலா? புதிய முறையிலா? நடத்துவது என்ற விவாதத்தை கையிலெடுத்து அரசுகள் காலத்தைத் தாழ்த்தி வருகின்றன.

புதிய முறைமை என்றால் எல்லை நிர்ணய முறைமையில் ஏற்பட்ட குறைபாடு நீக்கப்பட்டால் அல்லது சீர் செய்யப்பட்டால் தான் தேர்தல் நடைபெற வாய்ப்பு உள்ளது.

ஆனால் பழைய முறையில் நடத்துவதாயின் அது இலகுவானது. பாராளுமன்றில் அதற்கான அனுமதியை பெரும்பான்மையுடன் இந்த அரசு சுலபமாகப் பெறமுடியும்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வின் முழுமையான தீர்வாக மாகாணசபை முறைமை இல்லாதுவிடினும் அதுவே தீர்வின் ஆரம்பமாக இருக்கின்றது.

அதனால் தான் அரசுகள் தேர்தலை நடத்த அக்கறை காட்டுவதில்லை. அதையே இந்த அரசும் செய்கின்றது.

இதேநேரம் தமிழ் மக்களுக்கு இது அவர்களது இருப்புடன் தொடர்புடைய ஒன்று. ஆனால் ஏனைய மாகாணங்களுக்கு அது அவசியமற்றதாக இருக்கலாம்.

தேர்தலை நடத்த அரசு விரும்பாவிட்டால் குறைந்த பட்சம் இதை வடக்கு கிழக்கிலாவது நடத்த வேண்டும். இதை அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த குரலில் வலியுறுத்துகின்றன.

சர்வதேச சமூகம் இன்று எமது அரசியல் உரிமை குறித்துப் பேசுகின்றது. இந்திய அரசும் ஐ.நாவில் அதை வலியுறுத்துகின்றது.

குறிப்பாக ஐ.நாவின் தற்காலிக வரைபில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் அதிகாரங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றது. இதனால் இவ்விடயம் தற்போது சர்வதேசத்தின் குரலாக இருக்கின்றது.

அதனால் மாகாணசபை முறைமை நீக்கப்படாது. நீக்கப்பட்டால் இந்தியாவுடன் இலங்கை நேரடியாக மோதும் ஒரு சம்பவமாக உருவாக்கிவிடும். அதனால் மாகாண சபை முறைமையை நீக்க அரசு முயலாது.

அதேநேரம் புதிய அரசியலமைப்பின் ஊடாகத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு முழுமையாகக் கிடைக்குமாக இருந்தால் மட்டுமே மாகாணசபை முறைமையை இல்லாது செய்யும் சாத்தியம் ஏற்படும் என்றும் அங்கு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## பொலிஸ்மா அதிபரின் வட்ஸ்அப் எண்ணிற்கு ஒன்பதாயிரம் முறைப்பாடுகள்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்திற்குத் தொடர்பு கொள்ள வழங்கப்பட்ட வட்ஸ்அப் எண்ணிற்கு 9 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யு வுட்லர் தெரிவித்துள்ளார்.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெற்று வரும் குற்றங்கள் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் பொதுமக்கள் உடனடியாகத் தெரிவிக்க, பொலிஸ்மாஅதிபர் பிரியந்த வீரசூரியவினால் சமீபத்தில் 071 859 8888 என்ற வட்ஸ்அப் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

### புதிய...

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துரைத்த அவர்,

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புதிய பிரேரணையிலும் உள்ளக செயற்பாடுகளுக்குத் தடைகளை ஏற்படுத்தும் விடயங்கள் உள்ளன. அதனை நாங்கள் எதிர்க்கிறோம். அதற்கு நாங்கள் உடன்படவில்லை. அதில் முன்னைய 5/1 என்ற பிரேரணையின் ஆணை நீடிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. எனவே அதனை எங்களால் ஏற்றுக்கொள்ளவே முடியாது.

புதிய பிரேரணையை ஏற்று அமுல்படுத்தினால் அல்லது அதனை ஏற்றுக்கொண்டால், அதன் ஊடாக நாட்டில் பிளவுகள் தான் ஏற்படும். தற்போது முன்னெடுக்கப்படும் நல்லிணக்கத்துக்கும் அது தடையாக அமையும்.

மேலும் ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமை ஆணையாளரைச் சந்தித்தபோது உள்ளக ரீதியில் பொறுப்புக்கூறலை ஆராய்வோம் என்று கூறினோம். அவர்கள் சர்வதேச ரீதியில் ஆராயவேண்டும் என்று கூறினார்கள்.

செம்மணியில் சர்வதேச ரீதியான நடவடிக்கை இடம்பெற வேண்டும் என்ற ஒரு கோரிக்கை முன்வைக்கப்படுகிறதே என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் விஜித ஹேரத்,

அப்படித் தேவையில்லை. இலங்கையில் அதனை முன்னெடுக்க முடியும். பல கட்டங்களில் அது நடைபெறும். அதில் தொழில்நுட்ப ரீதியான ஒத்துழைப்பு தேவை என்றால் நாம் அதனை சர்வதேசத்திலும் பெறுவோம். அதை எந்த நாட்டில் இருந்தும் நாம் பெறுவோம். உதாரணமாக, சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடமும் நாம் இதற்கான ஒத்துழைப்பைப் பெறுவோம் என்றும் கூறினார்.

காணாமல் போனோர் குறித்த கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் விஜித ஹேரத் காணாமல் போனோர் தொடர்பில் தகவல்களைத் தேடி ஆராய வேண்டும். அவர்கள் காணாமல் போனார்களா? இல்லையா? என்பதை முதலில் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். காணாமல்போனார்களா? என்பது தொடர்பாகவும் சிலருக்கு சந்தேகம் இருக்கிறது. அதன் பின்னர், இழப்பீடுகளை வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும். காணாமல் போனதற்கு யார் காரணம் என்பதை ஆராய்ந்து, விசாரணை நடத்தி சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார். (ந-7)

### உழவு ...

காயமடைந்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிவந்த உழவு இயந்திரம் ஒன்று வேகக்கட்டுப்பாட்டையிழந்து மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

சம்பவத்தையடுத்துக் குறித்த விபத்தை ஏற்படுத்திய உழவு இயந்திரம் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளது.

குறித்த விபத்தில் மிருசுவிலைச் சேர்ந்த நந்தகுமார் ஜெயலக்சுமி (வயது 46) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

இதேவேளை மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற கனகலிங்கம் செந்தூரன் (வயது 22) எனும் இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த கொடிகாமம் பொலிஸார் தப்பிச் சென்ற உழவு இயந்திரம் தொடர்பான தேடுதல்களை முடுக்கிவிட்டுள்ளனர். (ந-7,33,30)

### மந்திரி...

காலை 08.00 மணிக்கு நல்லூர் மந்திரி மனை முன்றலில் இடம்பெறவுள்ளது.

கடந்தசில நாட்களுக்கு முன் பெய்த கனமழை காரணமாக மந்திரி மனையின் ஒரு பகுதி உடைந்து விழுந்திருந்தது.

இந் நிலையிலும் மந்திரி மனையைப் புனரமைப்பதற்கு மந்திரி மனை அமைந்துள்ள காணியின் உரிமையாளர் இணங்க மறுக்கின்றமையைக் கண்டித்துக் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

### பெண்ணின்...

வயிற்றில் தங்கத்தை வைத்திருந்ததைப் பலாலி விமான நிலைய அதிகாரிகள் சோதனையில் கண்டறிந்தனர்.

இதனையடுத்துக் குறித்த பெண் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு சிகிச்சையின் பின் தங்கம் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பிரஸ்தாபப் பெண் கொழும்பைச் சேர்ந்தவர் என்றும் தெரியவருகிறது. (ந-7)

### அமெரிக்கா...

இந்தநிலையில், இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களுக்கான தீர்வை வரியை 20 சதவீதத்தால் குறைப்பதற்கு அமெரிக்கா கடந்த மாதம் தீர்மானித்திருந்தது.

இதனிடையே, அரசாங்கம் எதிர்பார்க்கும் மேலதிக நிவாரணம் இதுவரை கிடைக்கவில்லை எனவும், இது தொடர்பாக மேலும் எதிர்பார்ப்புடன் உள்ளதாகவும் வர்த்தக அமைச்சின் செயலாளர் கே.ஏ.விமலேந்திரராஜா தெரிவித்துள்ளார். (ந-7)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என்னை விசாரணை செய்யவில்லை எனின் நான் தவறிழைக்கவில்லை என்றே பொருள்



## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

**நல்லாட்சியை முன்னெடுப்பதை விடவும், பழிவாங்கும் செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் முன்னுரிமை வழங்கி வருகின்றது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விசனம் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதிகளுக்கான சலுகைகளை நீக்கும் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டமை உட்பட சமகால நிலைமைகள் சம்பந்தமாக ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தான் கொழும்பில் பிரத்தியேகமாக இல்லமொன்றை பெற்றுள்ள நிலையில் அதன் திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றது. அதேநேரம், எனக்கு மருத்துவச் சிகிச்சைகளையும் பெறவேண்டியுள்ளது.

ஆகவே, தற்போதைய அரச இல்லத்தில் தங்குவதற்கு இரண்டு மாத கால அவகாசம் கோரியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

1994 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்த எனக்கு டொரின்டனில் அரச இல்லம் வழங்கப்பட்டது. நான் இந்த இல்லத்திற்கு வரும்போது ஒரு புல் கூட இருக்கவில்லை.

நிலம் கூட நடக்க முடியாத அளவில் தான் இருந்தது. அப்பணிகளை முன்னெடுப்பதற்கான நிதியை அப்போதைய ராஜபக்ஷ அரசாங்கத்திடம் கோரியபோது, அவர்கள் அதனை வழங்குவதற்கு மறுத்துவிட்டார்கள். அதன் பின்னர் நான் எனது சொந்த நிதியில் இருந்து 14மில்லியன் ரூபாய் செலவழித்தே அதன் புனரமைப்பு பணிகளை முன்னெடுத்தேன்.

தற்போது சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும் நான் விழுந்தமையால் இடுப்பு பகுதியில் முறிவு ஏற்பட்டுள்ளது.

இதற்கான சிகிச்சையைப் பெற்றுவருகின்றேன். தினமும் உடற்பயிற்சிகளை செய்ய வேண்டியுள்ளது.

ஆகவே, இந்த இல்லத்தில் ஆயுட்காலம் வரையில் தங்கியிருப்பதற்கான அனுமதியைக் கோரி ஜனாதிபதி அநுரகுமாரவின் அரசாங்கத்துக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தேன். ஆனால் அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ஓய்வுபெற்ற ஐந்து ஜனாதிபதிகளில் தற்போதைய அரசாங்கத்தால் விசாரணைக்கு உட்படாத ஒரேயொரு நபர் நான் தான். நான் எந்த தவறும் செய்யவில்லை என்பது வெளிப்படையாகின்றது.

மேலும் அரசாங்கம் நல்லாட்சியை நிலைநாட்டி முன்னெடுப்பதிலும் பார்க்கபழிவாங்கும் செயல்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றது.

அவர்களுடைய சொந்த அரசாங்கத்தில் ஊழலை எவ்வாறு தடுப்பது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. மோசடி செய்பவர்களை கைது செய்கின்றமை பற்றி மட்டுமே அவர்கள் தொடர்ந்து கூச்சலிடுகிறார்கள்.

நாட்டை வளர்ப்பது பற்றி அவர்கள் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. கல்வித்துறை குழப்பத்தில் உள்ளது. சுகாதாரத்துறை குழப்பத்தில் உள்ளது. அவற்றை அவர்கள் கவனிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (க-8)

# பயணிகள் போக்குவரத்து சாரதிகள் பொதுப்போக்குவரத்து உரிமம் பெற வேண்டும்

## காலக்கெடு விதித்த அரசாங்கம்

(கொழும்பு)

பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் சாரதிகள் எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் பொதுப் போக்குவரத்து உரிமத்தை பெறுவது கட்டாயம் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

பொதுப்போக்குவரத்து உரிமத்திற்கான திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அதன்படி, இந்த ஆண்டு இறுதிக்குள் பொதுப் போக்குவரத்து சாரதிகள் உரிமத்தைப் பெற வேண்டும் எனவும், இப்போது ஆசன பட்டிகள் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. சில பஸ்கள் தயாரிக்கப்பட்ட போது ஆசன பட்டிகள் இல்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

ஆனால் பஸ்களில் ஆசன பட்டிகள் பொருத்த முடியாதபடி மாற்றியமைக்க முடியும். இப்போது அவர்கள் என்னையும் பொலிஸையும் ஏமாற்ற தங்கள் குழந்தைகளின் பாடசாலை பைகளில் உள்ள பட்டிகளை அணிந்துள்ளனர்.

எனவே, மக்களை ஏற்றிச் செல்லும் ஒவ்வொரு சாரதியும் பொதுப் போக்குவரத்து அனுமதி உரிமத்தைப் பெற வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். இப்போது நாங்கள் சில திட்டங்களை வகுத்துள்ளோம்,

அதற்கமைய, எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் பொதுப் போக்குவரத்து உரிமத்தை பெறுவது கட்டாயம் என அவர் சுட்டிக்காட்டினார். (க-8)

# அநுர ஆட்சிக்கு ஒரு வருடம்

(கொழும்பு)

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுர குமார திசாநாயக்க தேர்ந் தெடுக்கப்பட்டு நாளை செவ்வாய்க் கிழமை ஒரு வருடம் பூர்த்தியாகவுள்ளது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் 21 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க 5.634 மில்லியன் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். பின்னர் அநுரகுமார திஸாநாயக்க கடந்த ஆண்டு செப்ரெம்பர் 23 ஆம் திகதி ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

இந்த நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பதவியேற்றதிலிருந்து, நாட்டில் நேரடி வெளிநாட்டு முதலீடு ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை கடந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த ஆண்டில் 1.048 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு நேரடி முதலீட்டைப் பெறப்பட்டதாக இலங்கை முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது. இந்த முதலீடுகளில் 65% இற்கும் அதிகமானவை முன் னணி உலகளாவிய முதலீட்டாளர்களால் செய்யப்பட்டவை என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மாத்திரம் 780 மில்லியன் டொலர்வெளிநாட்டு முதலீடுகளை இலங்கை ஈர்த்துள்ளதாகவும், இவ்வருடத்திற்கான ஒரு பில்லியன் டொலர் இலக்கை அடைய முடியும் என நம்புவதாகவும் இலங்கை முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது. (க-8)

# பெண் நடத்துநர்கள் அமைச்சு புதிய யோசனை

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபைக்கு 450 சாரதிகள் மற்றும் 300 நடத்துநர்களை நியமிக்கப் போவதாகவும் குழந்தைகளை ஏற்றிச் செல்லும் பேருந்துகளில் பெண் நடத்துனர்களை பணியமர்த்த அமைச்சு எதிர்பார்க்கின்றது எனவும் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விமானப் பணிப்பெண்களுக்கு வழங்கப்படுவதைப் போன்ற சீருடைகளை இந்தப் பெண் நடத்துநர்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். (க-8)

# மாறுவேடமணிந்து சட்டவிரோத செயல்; கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை

(கொழும்பு)

மாறுவேடமிட்டு சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோரை அடையாளம் காண்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குற்றவாளிகள் அல்லது தீவிரவாத சக்திகள் பாதுகாப்புப் படை சீருடையில் மாறுவேட மிட்டு சட்டவிரோத செயல்களைச் செய்ய முயற்சிப்பதைத் தவிர்க்க பொலிஸ்மா அதிபர் தமது அதிகாரிகளுக்கு கடுமையான அறிவுரைகளை வழங்கியுள்ளார்.

அதன்படி, முக்கியஸ்தர்களின் நிகழ்வுகளுக்கு நியமிக்கப்பட்ட பணியாளர்களை துல்லியமாக அடையாளம் காண நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சமீபத்தில், சட்டத்தரணியாக மாறி துப்பாக்கிச் சூட்டில் சந்தேக நபரை கொலை செய்த சம்பவம் நினைவுகூரும் வகை யில், இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க அனைத்து தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் அதிகாரிகளுக்கு வலியுறுத்தியுள்ளார். (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆசிய கிண்ண கிரிக்கெட்

# இலங்கையின் வெற்றி நடைக்கு முடிவு கட்டிய பங்களாதேஷ்



ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரின் சூப்பர் 4 சுற்றின் முதல் ஆட்டம் டுபாயில் நடைபெற்று வருகிறது. இதில் இலங்கை - பங்களாதேஷ் அணிகள் விளையாடின.

நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் பந்து வீச்சைத் தேர்வு செய்தது. அதன்படி இலங்கை அணி முதலில் துடுப்பாட்டம் செய்தது. தொடக்க வீரர்கள் பதுன் நிஷாங்கா (22), குசால் மெண்டிஸ் (34) நல்ல தொடக்கமாக அமைத்தனர்.

அடுத்து வந்த கமில் மிஷாரா 5 ஓட்டங்களிலும், குசால் பெரேரா 16 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

தசுன் ஷனகா தாக்குப்பிடித்து சிறப்பாக விளையாடினார். அதே வேளையில் 19ஆவது ஓவரில் முஷ்டாபிஷர் ரஹ்மான் 3 விக்கெட் வீழ்த்தினார். தசுன் ஷனகா கடைசி வரை ஆட்டமிழக்காமல் 37 பந்தில் 3 பவுண்டரி, 6 சிக்சருடன் 64 ஓட்டங்கள் விளாச இலங்கை 7 விக்கெட் இழப்பிற்கு 168 ஓட்டங்கள் சேர்த்தது.

தொடர்ந்து 169 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 19.5 ஓவரில் 6 விக்கெட்டை மட்டும் இழந்து 169 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் தரப்பில் அதிகபட்சமாக சைப் ஹாசன் 61 ஓட்டங்கள் எடுத்தார். இலங்கை தரப்பில் வனிந்து ஹசரங்கா, தசுன் ஷனகா தலா 2 விக்கெட் வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)



பசுமை மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒராயம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய பாலாவி தீர்த்தக்கரை பகுதியில் சூழல் நட்பு மர நடுகை நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்றது. (படம்:ஜோசப்நயன்)



யாழ்ப்பாணம் பொது நூலகத்தில், சிறுவர் பகுதியில் புத்தகக் கண்காட்சியும், ஆவணவாக்கல் பகுதியில் தொல்பொருட்கள் காட்சிப்படுத்தலும் நேற்று இடம்பெற்றது. அவற்றை பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பார்வையிட்டனர். (படம்:சுசாந்தன்)

# சர்வதேச உதைபந்தாட்ட இலங்கை அணிக்கு தலைமை அதிகாரியானார் ராஜசீலன்



வடமாகாண கல்வித் திணைக்கள உடற்கல்வி துறை பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.ராஜசீலன் சீனாவில் நடைபெறவுள்ள 16 வயதிற்குட்பட்ட சர்வதேச உதைபந்தாட்ட போட்டிக்கான இலங்கை அணியின் தலைமை அதிகாரியாக கல்வி மற்றும் விளையாட்டு அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகேவின் வழிகாட்டுதலின் கீழ் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் வேண்டுகோளின் பேரில் சீனாவின் லிஜியாங் நகரில் நடைபெறும். பெல்ட் அண்ட் ரோடு 2025 இன் 2 ஆவது 'டியான்யு லியுஃபாங் கோப்பை' சர்வதேச போட்டிக்காக இலங்கை கால்பந்து அணி சீனாவுக்கு பயணமாகியுள்ளது. இப்போட்டி கடந்த சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இப்போட்டியின் தலைமை அதிகாரியான இ.ராஜசீலன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் என்பதுடன் கல்வி, விளையாட்டுத் துறையில் உடற்கல்வி ஆசிரியராகவும் ஆசிரிய ஆலோசகராகவும் கடமையாற்றுகின்றார். அத்துடன் சிறந்த விளையாட்டு வீரராகவும் மெய்வல்லுநர் விளையாட்டுக்களிலும் நீண்ட காலமாக சாதனையாளராகவும் திகழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (3)



# விராட்கோலியின் சாதனையை முறியடித்த ஸ்மிருதி மந்தனா




ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிவேக சதம் விளாசிய இந்திய வீரர் விராட் கோலியின் சாதனையை ஸ்மிருதி மந்தனா முறியடித்துள்ளார்.

இந்திய மற்றும் அவுஸ்திரேலிய மகளிர் அணிகளுக்கு இடையிலான 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் போது அவர் குறித்த சாதனையைத் தன்வசப்படுத்தியுள்ளார்.

28 பந்துகளில் அரைசதம் கடந்த அவர், 50 பந்துகளில் சதம் விளாசினார்.

ஸ்மிருதி மந்தனா 50 பந்துகளில் அதிவேக சதம் விளாசியதன் மூலம், ஒருநாள் போட்டிகளில் அதிவேகமாக சதம் விளாசிய இந்தியர் என்ற விராட் கோலியின் சாதனையை முறியடித்துள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அணிக்கெதிரான ஒருநாள் போட்டியில் விராட் கோலி 52 பந்துகளில் சதம் விளாசியிருந்தார். அதுவே இந்தியர் ஒருவரால் ஒருநாள் போட்டிகளில் அதிவேகமாக அடிக்கப்பட்ட சதமாக காணப்பட்டது.

இந்தநிலையில் குறித்த சாதனை தற்போது முறியடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் மீட்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 16 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்தில் உள்ள ஆண்கள் கழிப்பறையில் இருந்தே குறித்த போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 16.84 கோடி ரூபாய் மதிப்புள்ள குஷ் மற்றும் ஹஷிஷ் ரக போதைப்பொருட்கள் அடங்கிய பொதிகள் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியக அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளன.

கழிப்பறையைச் சுத்தம் செய்வதற்கு வருகை தந்த ஒருவர் இந்த பொதிகளைப் பார்த்து கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-8)

# இந்திய போர்க்கப்பல் கொழும்பு துறைமுகத்தில்

(கொழும்பு)

இந்திய கடற்படைக்கு சொந்தமான 'INS SATPURA' எனும் போர்க்கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

விநியோகம் மற்றும் சேவைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 403 பணியாளர்களுடன் குறித்த கப்பல் நேற்று முன்தினம் நாட்டிற்கு வந்துள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்படை மரபுகளுக்கு அமைய இந்திய கப்பலுக்கு சம்பிரதாய பூர்வ வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. நாட்டை வந்தடைந்த போர்க் கப்பலான ''INS SATPURA'142.5 மீற்றர் நீளமுடையது என தெரிவிக் கப்படுகிறது.

கப்பல் நாட்டில் நங்கூர மிடப்பட்டிருக்கும் காலத்தில் அதன் பணியாளர்களை இலங்கையின் முக்கியமான இடங்களைப் பார்வையிட பல பகுதிகளுக்கு அழைத்துச் செல்லத்திட்டமிட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது. (க-8)





கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் இருதய சத்திரசிகிச்சைநிபுணர் வைத்திய கலாநிதி சிவசங்கர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (படம்- மகாலிங்கம்)


## மணிவிழா வாழ்த்து




திருமதி. சகாயதேவி குலேந்திரன்

(SLTS-I, B.A (Music), Dip in Education)

(1993.01.11 – 2025.09.22)

சேவை விபரம்

- யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்
- யா/ புனித ஜோசவ் வித்தியாலயம்
- யா/ சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

மாணவர்களின் கல்விக் கண் திறந்திட அயராது உழைத்த ஆசிரியரின் அளப்பரிய சேவையை உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்...

பாடசாலைச் சமூகம்

யா/சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.

(1575)



சிவமயம்

## அருள்மிகு ஆதிமயிலிட்டி காசி பூதராயர் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டப் பெருவிழா –2025

**மெய்யடியார்களே!**

பஞ்ச ஈச்சரங்களைக் கொண்ட சிவபூமி எனத் திருமூலர் போற்றிய இலங்கை மணித் திருநாட்டின் வட புலத்தில் சைவமும் தமிழும் சமயசாரமும் சிறந்து விளங்கும் யாழ்ப்பாண நன்னகரில் வடபால் அமைந்துள்ள ஆதிமயிலிட்டி எனும் செழிப்புற்று விளங்கும் கிராமத்தில் கோயில் கொண்டமைந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் காசிபூதராயப்பெருமானுக்கு,

**சித்திரத்தேர் வெள்ளோட்டப் பெருவிழா**


**காலம் – 22.09.2025 திங்கட்கிழமை நண்பகல் 12.02 – 1.32 மணி**

பெருமதிப்புக்குரிய விஷ்வப் பிரம்மஸ்ரீ

**Dr. கலாகேசரி சரவணமுத்து ஜெயமோகன்** அவர்களின் குருப்பெருந் துணையுடன்

சிற்பரதத்தின் நிர்மானம்

விஷ்வப் பிரம்மஸ்ரீ Dr. கலாகேசரி சரவணமுத்து ஜெயமோகன் அவர்களினால் நிர்மானிக்கப்பட்ட ஆதிமயிலிட்டி காசி பூதராயப் பெருமானுக்குரிய புதிய சித்திரத் தேரின் வெள்ளோட்ட நிகழ்வு நிகழும் விசுவாவசுவருடம் **புரட்டாதி மாதம் 06 ஆம் நாள் 22.09.2025 திங்கட்கிழமை** பூர்வபக்க பிரதமை திதியும் உத்தரம் நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய நண்பகல் 12.02 -1.32 மணிவரையுள்ள சுபவேளையில் நிகழத் திருவருள் கைகூடியுள்ளது.



இச் சுபவேளையில் காசி பூதராயப் பெருமான் மெய்யடியார்கள் நிகழ்கின்ற கிரியைகளிலும் வெள்ளோட்ட விழாவில் வடம் பிடித்தும் எம்பெருமானின் திருவருட் கடாட்சத்தினைப் பெற்றேகுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

வாரீர் வாரீர் வடம் பிடிக்க



**தேர் வெள்ளோட்ட சிறப்புமலர் வெளியிடப்படும்.**

ஸ்தபதி விஷ்வப் பிரமஸ்ரீ Dr. கலாகேசரி சரவணமுத்து ஜெயமோகன் (சரவணன் சிற்பக் கலைக்கூடம் –நீர்வேலி) அவர் தம் குழுவினரால் 110 ஆவது தேராகப் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது.

நிர்வாகம்
ஆதிமயிலிட்டி காசி பூதராயர் ஆலயம்
மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை.

(5459)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றைய தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
(படங்கள்:-சிவசாந்தன், கஜிந்தன்)

# காற்றாலைக்கு எதிராக 49 ஆவது நாளாகவும் போராட்டம்



(மன்னார்)
மன்னாரில் முன்னெடுக் கப்பட்டு வரும் காற்றாலை மின் கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டம் 49 ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

போராட்டத்தில் ஈடுபட்ட இளையோர் காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக எழுதப்பட்ட பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னாரில் காற்றாலை மின் கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக முன்னெடுக் கப்பட்டு வருகின்ற போராட்டத்திற்கு நாளாந்தம் மன்னார் மாவட்டம் உள்ளடங்கலாக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் கிராம மக்கள்,பொது மற்றும் சிவில் அமைப்புக்கள் தொடர்ச்சியாக ஆதரவை வழங்கி வருகின்றனர்.

இந்த நிலையிலே நேற்று முன்தினம் சனிக்கிழமை வவுனியா பம்பைமடு வில் இருந்து அருட்தந்தை அருட் சகோதரிகள் தலைமையில் இளையோர் குழு ஒன்று வருகை தந்து தமது ஆதரவை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-285)

# மதிலுடன் மோதிய முச்சக்கரவண்டி




(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் - ஆனைக் கோட்டை பகுதியில் முச்சக்கர வண்டிஒன்று நேற்று முன்தினம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த முச்சக்கரவண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்து, மதில் ஒன்றில் மோதி விபத்துக் குள்ளாகியுள்ளது.

இதன்போது முச்சக்கரவண்டியில் சாரதி மாத்திரமே அதில் பயணித்துள்ளதோடு, அவர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (8)

# திலீபனின் ஊர்திக்கு வவுனியாவில் மக்கள் அஞ்சலி



(வவுனியா)
தியாக தீபம் திலீபனின் 38ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு "திலீபன் வழியில் வருகிறோம்" என்று முன்னெடுக்கப்படுகின்ற ஊர்தி பவனியானது நேற்று முன்தினம் வவுனியாவை வந்தடைந்தது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்தின் பொத்துவில் பகுதியில் இருந்து வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படத்துடன் குறித்த ஊர்தி பவனி வருகின்றது.

இந்நிலையில், வவுனியா மாநகரசபையின் முன்றலில் உள்ள பொங்கு தமிழ் நினைவு தூபி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் திடலுக்கு முன்னால் வந்த குறித்த ஊர்திக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்.

, பொது மக்கள் எனப் பலரும் மலர் தூபி, தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து வவுனியாவின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்ற ஊர்தி அங்கிருந்து வவுனியா வடக்கின் ஊடாக முல்லைத்தீவு நோக்கி சென்றமை குறிப்பிடத்தக்கது. (8-250)

# உயிரிழந்த நிலையில் கரையொதுங்கிய கடல்பசு



(மன்னார்)
மன்னார் தெற்கு கடற்கரை பகுதியில் கடல் பசு ஒன்று உயிரிழந்த நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் கரை ஒதுங்கியுள்ளது.

8 வயது மதிக்கத்தக்க கடல் பசு ஒன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

300 கிலோ எடையுடைய இந்த கடல் பசு 2.30 மீற்றர் நீளமுடையதாகும். இந்த கடல் பசு மீன்பிடி படகில் மோதி உயிரிழந்திருக்கலாம் என சுற்றுலாத் துறை அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். (8-285)

# சதுர்த்தி உற்சவம்



(யாழ்ப்பாணம்)
யாழ் வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 25.09. 2025 வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு அபிஷேகம், மூல மூர்த்தி பூஜை, வசந்த மண்டபூஜை நடைபெற்று விநாயகப்பெருமான் திரு வீதிவலம் வருவார் என ஆதீனகர்த்தாவும், பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ து. விவேகானந்தக்குருக்கள் அறியத்தருகிறார். (8)

# தியாக தீபம் திலீபனின் 7 ஆம் நாள் நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)
தியாக தீபம் திலீபனின் 7ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில், சுடரேற்றி, திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாத்துறையை மேம்படுத்த அரசு அக்கறை செலுத்துகிறது

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தை மீள கட்டியெழுப்பவும் அரசாங்கம் யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலா பயணிகளை உள்ளீர்ப்பதற்கும் அரசாங்கம் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதாக கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

மண்டைதீவு பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றினால் படகு சவாரி திட்ட ஆரம்ப நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் கடற்தொழில் அமைச்சர் கருத்து தெரிவிக்கும் போது, யாழ். மாவட்டத்தை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. இதன் ஓர் அங்கமாக சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதும் எமது இலக்காகும்.

இதற்காக அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன், தனியார் துறையினரும் ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அந்தவகையில் யாழ். படகு சவாரி திட்டம் மண்டைதீவு பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான திட்டங்கள் எமது யாழ். மண்ணுக்கு சுற்றுலாப் பயணிகளை மேலும் உள்ளீர்ப்பதற்கு இது உதவும் என நம்புகின்றேன் என மேலும் தெரிவித்தார்.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# இப்போது நாட்டில் பட்டினி இல்லை
# ரில்வின் சில்வா பெருமிதம்

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் ஆட்சி பொறுப்பை ஏற்றுக் கொண்டு ஓராண்டு காலத்திற்குள் எவரும் பட்டினி என்று கேள்விப்படாத வகையில் நாட்டை ஆட்சி செய்கின்றது என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார் .

ஊடக சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், வங்குரோத்து அடைந்திருந்த நாடொன்றையே நாம் பொறுப்பேற்றுக் கொண்டோம்.

கடந்த ஆட்சிக்காலத்தில் சில இடங்களில் மக்களுக்கு உண்பதற்கு உணவு இருக்கவில்லை எனவும் சிலர் பாகற்காயை சாப்பிட்டு உயிர் வாழ்ந்ததாகவும் செய்திகள் கிடைத்திருந்தன.

தேசிய மக்கள் சக்தி ஆட்சி பொறுப்பினை ஏற்றுக்கொண்டு ஓராண்டு காலத்தில் இந்த நிலையை மாற்றியதாகவும் எவரும் பட்டினியுடன் இருப்பதாக தற்பொழுது தகவல்கள் வருவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-8)

# மருந்துத் தட்டுப்பாட்டிற்கு பணத்தட்டுப்பாடு காரணமல்ல

## சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டுக்கு நிதிப் பிரச்சினை காரணமில்லை கொள்முதலில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அம்பாறை பகுதியில் நடைபெற்ற விழா ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள மருந்துகள் வரும் நவம்பர் மாதத்திற்குப் பின்னர் நாட்டில் கிடைக்கும்.

மேலும், மருந்துப் பதிவின் போது வரம்பற்ற விலைகளை அனுமதிக்க முடியாததால் சில நிறுவனங்கள் விநியோகத்தில் ஈடுபடவில்லை என்றும் தெற்காசிய சந்தை நிலையை அடிப்படையாகக் கொண்டு விலை வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-8)

# புறக்கோட்டை தீ விபத்து விசாரிக்க விசேட குழு

(கொழும்பு)

புறக்கோட்டை, முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள மின்சார உபகரண விற்பனை நிலையமொன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீப்பரவல் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவுக்கு பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர், சட்டத்தரணி சுனில் வட்டகல தலைமை தாங்குகிறார் என தெரியவருகிறது. கொழும்பு மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர், இலங்கை விமானப்படை மற்றும் கடற்படையினர் ஆகியோரின் பல மணி நேர முயற்சியின் பின்னரே குறித்த தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தீயை அணைக்கவும், அருகிலுள்ள கட்டடங்களுக்கு தீ பரவாமல் தடுக்கவும் சுமார் 15 தீயணைப்பு வாகனங்களும் விமானப்படையின் பெல்-212 உலங்கு வானூர்தியொன்றும் இந்த நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்டன. இந்த சம்பவத்தினால் எந்த வித உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லை என்பதுடன் பொருட் சேதங்கள் மதிப்பிடப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (க-8)

# சாவகச்சேரி-மகிழங்கேணி கிராமத்திற்கு உவர்நீர் தடுப்பணை அவசியம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோவிற்குடியிருப்பு மகிழங்கேணிக் கிராமத்திற்கு உவர் நீர்த் தடுப்பணை மற்றும் இணைப்பு வீதி ஆகியன அவசியமாக காணப்படுவதாக தென்மராட்சிப் பிரதேச செயலாளரிடம் கோவிற்குடியிருப்பு கிராம அபிவிருத்திச்சங்க செயலாளர் க.தர்ஷன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் பிரதேச செயலர் கோவிற்குடியிருப்பு கிராமத்திற்கு வருகை தந்திருந்த நிலையிலேயே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கிராம அபிவிருத்திச்சங்கத்தின் செயலாளர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், மகிழங் கேணிக் கிராம மக்கள் ஒவ்வொரு மாரி காலத்திலும் வெள்ள நீர் மற்றும் கடல் நீர் உட்புகுதல் ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றனர்.

கடல் நீர் கிராமத்திற்குள் உட்புகாத வகையிலும் அதே நேரம் வெள்ள நீர் தேங்காத விதத்திலும் உவர் நீர் தடுப்பணை அவசரமாக அமைக்கப்படுதல் வேண்டும்.

அத்துடன் மகிழங்கேணி கிராமத்திற்கான கடற்கரை வீதியானது விகோரியார் கடற்கரை வீதியுடன் இணைக்கப்படாமல் உள்ளது.

சுமார் 150 மீற்றர் வீதி புனரமைக்கும் பட்சத்தில் மேற்படி வீதி இணைக்கப்பட்டு போக்குவரத்து இலகுபடுத்தப்படும் என மேலும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தார்.

மேற்படி விடயங்கள் தொடர்பில் உரிய கவனமெடுத்து அதனை செயற்படுத்த முயற்சி எடுப்பதாக இதன்போது பிரதேச செயலர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 150 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 150 | 170 | 300 |
| தக்காளி | 250 | 160 | 250 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 250 | 240 |
| கோவா | 250 | 200 | 250 | 180 | 200 |
| கரட் | 200 | 300 | 350 | 280 | 300 |
| பூசணி | 60 | 60 | 50 | 40 | 50 |
| புடோல் | 120 | 150 | 120 | 120 | 250 |
| வாழைக்காய் | 150 | 100 | 100 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 160 | 140 | 200 |
| பாகற்காய் | 800 | 400 | 600 | 600 | 800 |
| வெண்டக்காய் | 150 | 150 | 100 | 120 | 400 |
| கருணைக் கிழங்கு | 350 | 320 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 350 | 600 |
| லீக்ஸ் | 200 | 200 | 300 | 200 | 240 |
| பீற்றூட் | 150 | 120 | 150 | 80 | 150 |
| கறிமிளகாய் | 400 | 300 | 350 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 180 | 400 |
| போஞ்சி | 600 | 550 | 600 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 80 | 150 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 140 | 200 | 150 | 80 | 250 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1000 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 220 | 150 | 280 | 160-220 |
| இராசவள்ளி | 800 | 700 | 1000 | 800 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 600 | 150 | 400 |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 100 | 250 |
| பொன்னாங்காணி | 120 | 50 | 200 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 60 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 200 | 100 | 150 | 100 | 350 |

# வரிவிதிப்பின் எதிரொலி
## இலங்கைக்கு படையெடுக்கும் நிறுவனங்கள்

(கொழும்பு)

அமெரிக்காவின் வரிச் சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்காக, இந்திய ஆடை உற்பத்தியாளர்கள் தங்களை உற்பத்தி மையங்களை கொழும்புக்கு மாற்றுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவுக்கு மிகப்பெரிய அளவில் ஆடைகள் ஏற்றுமதி செய்யும் 20 இற்கும் மேற்பட்ட இந்திய நிறுவனங்கள் கொழும்புக்கு வந்துள்ளன.

இவைகள் மூன்று மற்றும் ஐந்து ஆண்டுக் குத்தகை ஒப்பந்தங்களில் சேர்ந்துள்ளன என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா இந்தியாவின் இறக்குமதி பொருட்களுக்கு 50 சதவீத வரி விதித்துள்ளது. அதே நேரத்தில் இலங்கைக்கு வரி 20 சதவீதமாக விதித்துள்ளதை அடுத்தே இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளது.

இந்த போக்குகள் தொடர்ந்தால், இலங்கையில் ஆடைத் தொழில்துறைக்கு புதிய வேலைவாய்ப்புகள் மற்றும் பணியாளர்கள் பெருகும் வாய்ப்புள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## தண்ணீரில் எரியும் அடுப்பு
## தமிழரின் வியக்கத்தக்க சாதனை




(டில்லி)
நீரில் உள்ள ஹைட்ரஜன் மூலக்கூறுகளைப் பயன்படுத்தி, நீரில் எரியும் அடுப்பினைக் கண்டுபிடித்துள்ள HONC நிறுவனத்தின் நிறுவனர், தமிழ்நாட்டைச் சேர்ந்த சேலம் பேளூரைச் சேர்ந்த தமிழர், இராமலிங்கம் கார்த்தி.

வெறும் 5 லீற்றர் சுத்தமான நீரில் 6 மாதங்கள் இந்த அடுப்பைப் பயன்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

புதுப்பிக்கத்தக்க மாற்று எரிசக்தியாகச் சுத்தமான நீரினைப் பயன்படுத்தி, இய ற்கை வளங்களை அழிக்காமல், சுற்றுச் சூழலை மாசு படுத்தாமல், விபத்துகள் ஏற்படா வண்ணம், பாமர மக்களும் பாதுகாப்பாகப் பயன்படுத்தும் வகையில், மிகக்குறைந்த மின் பயன்பாட்டுச் செலவில் உருவாக்கப்பட்டுள்ள நீரில் எரியும் அடுப்பினை, தம்முடைய 20 ஆண்டுகால ஹைட்ரஜன் குறித்த ஆராய்ச்சியின் விளைவாக இராமலிங்கம் கார்த்தி அவர்கள் கண்டுபிடித்துச் சாதனை புரிந்துள்ளார்.

நீரினை எரிபொருளாகக் கொண்ட சமையல் அடுப்பினைப் பயன்படுத்துவதன் மூலம், இனி வருங் காலங்களில் எரிபொருள் தேவைக்காக நிலம், நீர், காற்றினை மாசுபடுத்தும் கொடுமைகள் வெகுவாகக் குறைந்துவிடும்.

அந்த வகையில் இந்திய அரசின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கும் இந்த அரிய கண்டுபிடிப்பு செயற்பாட்டிற்கு வந்தால், அந்நிகழ்வு புதுப் பிக்கத்தக்க மாற்று எரி சக்தித்துறையில் மிகப்பெரிய புரட்சியாகவும், அறிவியல் வளர்ச்சியில் மாபெரும் சாதனையாகவும் திகழும் எனப் பொது மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (க-8)

## கோவிந்தனுக்கு கோடி காணிக்கை

(டில்லி)
திருப்பதி ஏழுமலையான் கோயிலில் கடந்த சனிக்கிழமையன்று 82,042 பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு வருகைதரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. 24 மணிநேரமும் மக்கள் காத்திருந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், கடந்த சனிக்கிழமையான ஒரே நாளில் மக்கள் 4.59 கோடி ரூபா உண்டியல் காணிக்கை செலுத்தியுள்ளனர் என ஆலய நிர்வாகம் சுட்டிக்காட்டியுள்ளது. (க-8)

## விண்வெளிக்குச் சென்ற எலிகளில்
## 65 எலிகள் உயிருடன் பூமிக்குத் திரும்பின



(மொஸ்கோ)
ரஷ்யாவின் Bion-M No.2 உயிரியல் செயற்கைக்கோள் மூலம் விண்வெளிக்கு கடந்த மாதம் 75 எலிகள் அனுப்பப்பட்டன.

இந்தநிலையில் குறித்த 75 எலிகளில் 10 எலிகள் பலியாகியுள்ளதாக செய்தி வெளியிட்டுள்ளன.

விண்வெளிப் பயணத்தின்போது வீரர்களுக்கு ஏற்படும் உயிரியல் தாக்கங்கள் குறித்த துல்லியமான தகவல்களைப் பெறுவதற்காகக் குறித்த திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய 30 நாட்கள் சுற்றுப் பாதையிலிருந்த எலிகளில் 10 எலிகள் இறந்துவிட, 65 எலிகள் வெற்றிகரமாகப் பூமிக்குத் திரும்பி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-8)

## நிவாரண மையங்களையும் தாக்குவோம்
## எச்சரிக்கும் இஸ்ரேல் இராணுவம்



(ஜெருசலேம்)
காசாவின் மிகப்பெரிய நகரான காசா சிட்டியில், மருத்துவமனைகள் தவிர்த்து நிவாரண மையங்கள் உள்ளிட்ட மற்ற எந்தப் பகுதிக்கும் தங்கள் தாக்குதலில் இருந்து பாதுகாப்பு கிடையாது என்று இஸ்ரேல் இராணுவம் எச்சரித்துள்ளது.

இது குறித்து நிவாரண அமைப்புகளிடம் ராணுவம் கூறியுள்ளதாவது: காசா சிட்டியில் மருத்துவமனைகள் மட்டுமே பாதுகாக்கப்படும்.

எனவே, மற்ற அனைத்து நிவாரண உள் கட்டமைப்புகளும் தாக்குதலுக்கு உள்ளாகலாம். எனவே, அங்கிருந்து அனைவரும் உடனடியாக வெளியேற வேண்டும் என்று இஸ்ரேல் இராணுவம் எச்சரித்துள்ளது.

ஏற்கனவே, பொது மக்கள் அனைவரும் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேற வேண்டும் என்று எச்சரித்துள்ள இஸ்ரேல் ராணுவம், தற்போது நிவாரண கட்டமைப்புகள் மீதும் தாக்குதல் நடத்தப் போவதாக எச்சரித்துள்ளது. (க-8)


## ஆபிரிக்க...
## இறப்பெண்...

ஆபிரிக்க
குரங்கம்மைத்...
இலட்சம் பேர்வ...
தாகவும் இரண்...
ழுந்துள்ளதாக...
அமைப்பு சுட்டிக்...

ஆபிரிக்க நாடுகளில், கடந்த 2024 ஆம் ஆண்டு தொடங்கியது முதல் இரண்டு இலட்சம் பேருக்கு குரங்கு அம்மை பாதிப்புகள் பதிவாகியுள்ளதாக, ஆபிரிக்கா நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் தெரிவித்துள்ளன.

ஆபிரிக்காவின் 29 நாடுக... மையின்... உறுதிய... 2024... வரி மா... குரங்கு... பதிவாக... சுமார்... குரங்கு... கப்பட்டு...

## பிணைக் கைதிகளின்...
## இஸ்ரேலை எச்ச...



(ஜெருசலேம்)
இஸ்ரேல்- ஹமாஸ் போர் இரண்டு ஆண்டுகளை எட்டியுள்ளது. கடந்த, 2023 இல் ஹமாஸ் பயங்கரவாதிகள் இஸ்ரேலுக்குள் புகுந்து நடத்திய தாக்குதலில் 1,200 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 250 பேரை பிணைக்கைதிகளாகப் பிடித்து சென்றனர் ஹமாஸ் அமைப்பினர்.

பிணைக் கைதிகளை மீட்கத் தான் ஹமாஸ்க்கு எதிராக இஸ்ரேல் போரைத் தொடங்கியது. பிணைக் கைதிகளில் பலர் இறந்து விட்டனர் பலர் மீட்கப்பட்டனர். இன்னும் 47 பேர் ஹமாஸ் வசம் இருக்கின்றனர். ஹமாஸ் பயங்கரவாதிகளை அடியோடு ஒழிப்போம் என்று கூறி இஸ்ரேல் இராணுவம், கடந்த சில நாட்களாக... தாக்குதலை...

இந்த... இஸ்ரேலிய... படங்களை... கள் வெளி... வொரு பி... 1986இல்... இஸ்ரேலி... அதிகாரிய...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# க்காவை ஆட்டிப்படைக்கும் குரங்கம்மை

# ண்ணிக்கை இரண்டாயிரத்தைத் தாண்டியது

**க்க நாடுகளில் இதுவரை மத் தாக்கத்தினால் இரண்டு பர்வரை பாதிக்கப்பட்டுள்ள ரெண்டாயிரம் பேர் உயிரி தாகவும் உலக சுகாதார ட்டிக்காட்டியுள்ளது.**



நாடுகளில் குரங்கு அம்மையின் பரவல் உள்ளமை உறுதியாகியுள்ளது. கடந்த 2024 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதல் 1,91,559 குரங்கு அம்மை பாதிப்புகள் பதிவாகியுள்ளன. இத்துடன், சுமார் இரண்டாயிரம் பேர் குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்டு பலியாகியுள்ளனர்.

இருப்பினும், கடந்த மே மாதம் பதிவான பாதிப்புகளுடன் ஒப்பிடுகையில், தற்போது குரங்கு அம்மையின் பரவல் 70 சதவிகிதம் குறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. கடந்த மே மாதம் 1,620 பாதிப்புகள் கண்டறியப்பட்ட நிலையில், சென்ற வாரம் 491 பாதிப்புகள் மட்டுமே உறுதியாகியுள்ளன.

முன்னதாக, குரங்கு அம்மை தொற்றானது, குழந்தைகள் மற்றும் எச்.ஐ.வி. நோயாளிகளையே அதிகம் பாதிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பாலான ஆபிரிக்க நாடுகள் உள்நாட்டுப் போர்களினாலும், ஆட்சியாளர்களின் ஊழலினாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால், அந்நாடுகளில் மக்களுக்குத் தேவையான சுகாதாரம், மருத்துவம் மற்றும் உணவு உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகள் கிடைப்பது அரிதான ஒன்றாகக் கருதப்படுகிறது.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு, ஆபிரிக்காவில் குரங்கு அம்மை பரவலுக்கான அவசரநிலை நீக்கப்படுவதாக, உலக சுகாதார அமைப்பு அறிவித்திருந்தது. ஆனால், இந்த அவசரநிலை நீக்கப்படுவது, தொற்று பரவல் முடிவடைந்துவிட்டது என அர்த்தம் இல்லை எனவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியது குறிப்பிடத்தக்கது. (க-8)

## களின் புகைப்படத்தை வெளியிட்டு எச்சரித்த ஹமாஸ் அமைப்பு



ாட்களாக காசாவில் தரைவழித் ாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், 47 இஸ்ரேலிய பிணைக் கைதிகளின் டங்களை ஹமாஸ் பயங்கரவாதி ள் வெளியிட்டுள்ளனர். ஒவ்வொரு பிணைக் கைதிக்கும் 986இல் பிடிபட்டு கொல்லப்பட்ட இஸ்ரேலிய விமானப்படை திகாரியான "ரான் ஆராட்" என்று பெயரிடப்பட்டு, அதனுடன், ஒரு எண்ணும் வழங்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு போர் நிறுத்த ஒப்பந்தத்தை நிராகரித்ததற்கும், எதிர்ப்பை மீறி காசாவை கைப்பற்றும் நோக்கில் படையெடுப்பதற்கும் கண்டனம் தெரிவித்து வாசகம் எழுதப்பட்டுள்ளது. (க-8)

## தொழுகையில் இருந்தவர்களை துவம்சம் செய்த ட்ரோன்

(சூடான்)

சூடானின் டார்பர் பகுதியில் உள்ள மசூதியொன்றில் ட்ரோன் தாக்குதலில் 70 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஏல் - ஃபாஷர் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.


தாக்குதலுக்கு துணை ராணுவ விரைவு ஆதரவுப் படைகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஆனால் அந்தக் குழு அதை மறுத்துள்ளது.

டார்பூரில் உள்ள கடைசி இராணுவக் கோட்டையும், சண்டையில் சிக்கியுள்ள 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களின் தாயகமுமான எல்-ஃபாஷரினை தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர துணை இராணுவத்தினர் போராடி வருகின்றனர்.

இத் தாக்குதலில் 78 பேர் உயிரிழந்துள்ளதுடன் சுமார் 20 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கட்டடத்தின் இடிபாடுகளில் இருந்து உடல்களை மீட்கும் பணிகள் இடம்பெற்று வருவதாக அந்த நாட்டு மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் உலகப்போரில் பயன்படுத்திய குண்டு மீட்பு



(பீஜிங்)

சீனாவின் சிறப்பு அந்தஸ்து மாகாணமான ஹொங் கொங்கில் இரண்டாம் உலகப் போரின் போது பயன்படுத்தப்பட்ட மிகப் பெரிய குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குவாரி பே பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை கட்டுமானப் பணிகளுக்காக தோண்டிக் கொண்டிருந்தபோது இக் குண்டு தென்பட்டது. தகவலறிந்து பொலிஸார் மற்றும் வெடிகுண்டு நிபுணர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். ஆய்வில், குண்டின் நீளம் 1.5 மீற்றர், எடை எனவும் அதன் 450 கிலோ எனவும் கண்டறியப்பட்டது.

"இது இரண்டாம் உலகப் போர் காலத்து குண்டு என்பதை உறுதி செய்துள்ளோம். இதை செயலிழக்கச் செய்யும் பணி மிகவும் ஆபத்தானது என்பதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 1,900 வீடுகளில் வசிக்கும் சுமார் 6,000 பேரை வெளியேற்றினோம்" எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெடிகுண்டு செயலிழப்புப் படையினர்கள் பல மணி நேர போராட்டத்திற்கு பின் குண்டை வெற்றிகரமாக செயலிழக்கச் செய்தனர். இதனால் அண்டை மக்கள் அனைவரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். (க-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2 இல் செவ்
கி-பா: 63
உயரம்: 5' 8"
தகைமை/தொழில்: Degree, Work(Gov)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16071

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்:மூலம் கி-பா: 22
உயரம்:5' 9"
தகைமை/தொழில்-A/L, fil(Own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16073

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்:அத்தம்
உயரம்:6"
தகைமை/தொழில்:A/L, Driver (own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16074

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்:உத்தரம்
கி-பா: 5 1/2
உயரம்:5' 6"
தகைமை/தொழில்:A/L,கமம்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16078

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி-பா: 49 3/4
உயரம்:5' 5"
தகைமை/தொழில்: HNDA,MA
எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: B/16079

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்: Bsc, Cashier (London)
எதிர்பார்ப்பு: வெளிநாடு(London)
தொ.இ: G/16097

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Accountant (france)
எதிர்பார்ப்பு: வெளிநாடு(france)
தொ.இ: G/15832

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 2 இல் செவ்
உயரம்:5' 5"
தகைமை/தொழில்: BA, ஆசிரியர் (PVT)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/15835

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி-பா:28 1/2
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்: அரசதொழில் (பிரான்ஸ்)
எதிர்பார்ப்பு: வெளிநாடு (பிரான்ஸ்)
தொ.இ: G/15836

பிறப்பு: 1989 RC
நட்சத்திரம்: உத்தரட்டாதி 10இல் சூரி செவ்
உயரம்: 5' 5"
தகைமை/தொழில்:Doctor
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15838

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 447



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## ஒரு விசித்திர வழக்கு

இன்றைக்கு உலகம் ரொம்பவும் மாறித்தான் போய்விட்டது சார்.

கற்பனையை விட. சுவாரஸ்யமான சம்பவங்கள் எல்லாம் கண் முன்னால் நடந்துகொண்டிருக்கிறது!

பிரான்ஸில் நடந்த சம்பவம் இது.

ஒரு பாறையிலே கார் மோதி எரிந்து போய் விட்டது. அதிலே போனவரும் இறந்து போனார்.

உடனே பொலிஸ் அங்கே போய் சேர்ந்தது..

கார் நம்பரைப் பார்த்து ஆள் யார் என்று கண்டு பிடித்தார்கள். அவருடைய வீட்டுக்குத் தகவல் கொடுத்தார்கள். அவருக்கு ஒரு மனைவி, ஒரு காதலி .ஆக இரண்டு பேர்... இரண்டுபேரும் சண்டை போடாமல் ஒற்றுமையாகவே இருந்தார்களாம்.

இந்த இரண்டு பேரும் தகவல் அறிந்து உடனே கறுப்பு டிரஸ் போட்டுக்கொண்டு விபத்து நடந்த இடத்துக்கு வந்தார்கள் கருகிப் போன சடலத்தைப் பார்த்தார்கள்.

அது எங்கள் கணவர்தான் என்று அடையாளம் காட்டினார்கள். அதன்பின் முறையான பிரேத பரிசோதனை நடந்தது. அவர் விபத்தால் இறந்துபோனதாக அதிகாரிகள் சொல்லிவிட்டார்கள்.

சடலத்தை வாங்கிக்கொண்டுபோய் அவர்களும் எரித்து விட்டார்கள். இறந்துபோன அவர் மூன்று இன்சூரன்ஸ் கம்பெனிகளிலே 8 ஆயுள் இன்சூரன்ஸ் பாலிஸி எடுத்திருந்தாராம்.

அந்த மூன்று கம்பெனிகளிலே இரண்டு கம்பெனிகள் அவர் மனைவிக்கு இன்சூரன்ஸ் பணத்தை கொடுத்துவிட்டது.

ஒரு கம்பெனி மட்டும் பணம் கொடுக்காமல் கொஞ்சம் தாமதம் செய்துகொண்டு வந்தது.

அந்த கம்பெனி ஒரு தனியார் துப்பறியும் நிறுவனத்திடம் போனது. ஒரு துப்பறியும் நிபுணரை வாடகைக்கு அமர்த்தியது.

அவருடைய விதவை மனைவியையும் காதலியையும் கண்காணிக்கச் சொல்லியது.

அந்த நிபுணர் விபத்து சம்பந்தமான ரெக்கார்டுகளையெல்லாம் பார்த்தார். கார் தீப்பிடிக்க எந்த காரணமும் இல்லை என்று தெரிந்தது. கருகிப் போன சடலத்தின் பல் அமைப்பு சம்பந்தமான குறிப்புகளையும் பார்த்தார்.

அந்த மனைவியும் காதலியும் போன்மூலமாக பேசுவதை ரகசியமாக ஒட்டுக் கேட்டார்.

எல்லாவற்றையும் கவனிக்கும் போது காரிலே செத்துப் போனது உண்மையிலேயே அவர் இல்லை என்பது தெரிந்துவிட்டது.

அப்படி என்றால் அவர் எங்கே?

அந்த ஆசாமிக்கு 46 வயசு இருக்கும். அவனைக் காணவே இல்லை. ஆனால் அந்த மனைவியோடவும் காதலியோடவும் வேறு ஒரு இளைஞன் அடிக்கடி பேசுவதைக் கவனித்தார்கள்.

ஒரு நாள் திடீரென்று பிடித்து விசாரிப்போம்.

இந்த இளைஞன் தான் அவர் என்பது தெரிந்தது.

என்ன விடயம் தெரியுமா?

பிளாஸ்டிக் சர்ஜரி செய்து முகத்தையே மாற்றியிருக்கிறார்.

அப்படி என்றால் அந்த கார் விபத்து?

இவர் என்ன செய்திருக்கிறார் என்றால் முதலிலே ஒரு ஆஸ்பத்திரியிலே வேலைபார்க்கிற ஒரு சிநேகிதனிடம் போய் ஒரு அனாதை சடலம் ஏதாவது கிடைக்குமா என்று கேட்டிருக்கிறார்.

அந்த சமயம் பார்த்து ஆஸ்பத்திரியிலே ஸ்டாக் எதுவும் இல்லை.

உடனே இரண்டு பேருமா சேர்ந்து ஒரு பிளான் பண்ணி ஒரு பிச்சைக்காரனை அழைத்துக்கொண்டு வந்து அவனுக்கு அளவுக்கு மீறி தூக்கமாத்திரையை கொடுத்து காலி செய்து அவனைத் தன்னுடைய காரிலே வைத்துக் கொண்டு போய் ஒரு பாறையிலே மோதவிட்டு தீயும் வைத்திருக்கிறார்கள் அதன்பின் அவர் பிளாஸ்ரிக் சர்ஜரி செய்து தன் முகத்தையே அடையாளம் தெரியாமல் செய்துவிட்டார்.

எப்படியிருக்கு பாருங்க இந்த ஏமாத்து வேலை? அவன் திட்டம் மட்டும் நிறைவேறியிருந்தா நம்ம கணக்குக்கு சுமாராக ஒரு எட்டு கோடி ரூபா அவனுக்குக் கிடைத்திருக்குமாம். பாவம் மாட்டிக்கொண்டான். இப்போ ஆயுள் தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கிறான்.

இந்தக்காலம் எப்படி இருக்கிறது என்றால் தப்பு செய்கிறவனும் புத்திசாலித்தனமாக அதை செய்கிறான். கொள்ளையடிக்கிறவனும் புத்திசாலித்தனமாக கொள்ளையடிக்கிறான்.

அதனால் நாங்கள் அதைவிட புத்திசாலித்தனமாக இருந்து அதை சமாளிக்க வேண்டியிருக்கு. ஒரு அம்மா ஒரு இன்சூரன்ஸ் கம்பெனியைத் தேடிவந்தாராம். இதுவும் வெளிநாட்டிலே தான்.

வந்து... அங்கேயிருந்த அதிகாரியைப்பார்த்து... "ஏன் சார்... இன்றைக்கு என் கணவருடைய உயிரை இன்ஷூர் செய்துவிட்டு, நாளைக்கு அவர் செத்துப் போயிட்டா எனக்கு ஏதாவது கிடைக்குமா?" என்று கேட்டிருக்கிறார்.

"[illegible]ம்!" என்றார் அவர். "எப்படி?" என்று கேட்டார்.

"[illegible] தண்டனை! " என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## ஆட்டுப்பால்




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சித்த மருத்துவத்தில் சிறந்த ஆகாரமாகவும் வளரும் குழந்தைகட்கு மேலும் சிறந்ததாகவும் உகந்த அனுபானமாகவும் ஆட்டுப்பால் பயன்படுத்தப்படுகிறது.

அதிலும் வெள்ளாட்டு இனத்தில் ஆட்டுப்பாலிற்கு மேலும் சிறந்த மருத்துவப் பண்புகள் உள்ளது. ஆட்டுப்பாலில் புரதம், கல்சியம், உயிர்ச்சத்து A, E மற்றும் தாதுக்கள் நிறைந்துள்ளன. பசுவின் பாலை ஜீரணிக்க முடியாதவர்களுக்கு ஆட்டுப்பால் ஒரு சிறந்த மாற்றாகும். ஏனெனில் அதிலுள்ள சிறிய கொழுப்புத் துகள்கள் மற்றும் குறைந்த லாக்டோஸ் காரணமாக செரிமானம் எளிதாகிறது. ஆட்டுப்பால் அழற்சி எதிர்ப்புப் பண்புகளைக் கொண்டுள்ளது. இது ஒவ்வாமை ஆஸ்துமா போன்ற நிலைகளுக்கு உதவக்கூடும். மேலும் இது தோலுக்கு நன்மை பயக்கும். மேலும் முகப்பராமரிப்பிலும் பயன்படுத்தலாம்.

ஆட்டுப் பாலில் உள்ள சிறிய கொழுப்புத்துகள் மற்றும் குறைந்த லாக்டோஸ் (பால் சர்க்கரை) காரணமாக இது செரிமான மண்டலத்திற்கு மிகவும் எளிதானது. இது லாக்டோஸ் சகிப்புத் தன்மை இல்லாதவர்களுக்கு ஒரு நல்ல மாற்றாக உள்ளது. ஆட்டுப்பாலை புரதம், கல்சியம், பொட்டாசியம், பொசுபரசு மற்றும் உயிர்ச்சத்து A, E போன்ற அத்தியாவசிய விற்றமின்கள் மற்றும் தாதுக்கள் நிறைந்துள்ளன. ஆட்டுப்பாலில் உள்ள புரதங்கள் அழற்சியைக் குறைக்கும் பண்புகளைக் கொண்டுள்ளன. இது ஆஸ்மா ஒவ்வாமை மற்றும் வாதநோய் போன்ற அழற்சி நிலைகளில் நன்மை பயக்கும்.

ஆட்டுப்பாலில் உள்ள விற்றமின்கள் மற்றும் லாக்டிக்க மிலம் சருமத்தை பளபளப்பாகவும் முகப்பருக்களைக் குறைக்கவும் பயன்படுத்தலாம். வளர்சிதை மாற்றக்



கோளாறுகளை நிர்வகிக்க உதவும். ஆன்டி ஆக்சிடல்களை ஆட்டுப்பால் கொண்டுள்ளது. சிறந்த செரிமானத்திற்கு, தூங்குவதற்கு முன் ஆட்டுப்பால் அருந்துவது செரிமானத்தை அமைதிப்படுத்தி தூக்கத்தை மேம்படுத்தும். ஆட்டுப்பால் முழுமையான உணவு, செரிதாக செரிக்கக் கூடியது. ஊட்டச் சத்துக்கள் நிறைந்தது.

இந்தப்பால் பசியின்மை, குடற்புண் ஆகியவற்றிக்கு சிபாரிசு செய்யப்படுகிறது. ஈரல் செயற்பாடு குறைவாக உள்ளவர்களுக்கும் மஞ்சல் காமாலை, அமிலத்தன்மை அதிகரிப்பு உள்ளவர்களுக்கும் பசுப்பாலை விட ஆட்டுப்பால் சிறப்பானதாக கருதப்படுகிறது. மேலும் ஆட்டுப்பாலில் பொஸ்பரஸ், உயிர்ச்சத்து B12, செலினியம், ரிபோபிளோவின் போன்ற சத்துக்களும் உள்ளன. இதன் காரணமாக ஆட்டுப்பால் குடிப்பதனால் உடலுக்கு அதிக சத்துக்கள் கிடைக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. ஆட்டுப்பாலை பூலோக அமிர்தம் எனவும் குறிப்பிடுவார்கள். சித்த மருத்துவத்தில் வெள்ளாட்டு இன ஆட்டுப்பாலிற்கு மருத்துவக் குணங்கள் அதிகம் உள்ளதாக கருதப்படுகிறது. காடுகள், மலைகள், ஆற்றங்கரைகள், புதர்கள் பல வகையான மூலிகைச் செடிகள் நிறைந்த இந்த இடங்களில் இவ் வகை இன ஆடுகள் மேய்ந்து வருதலும் அதற்கு முக்கிய காரணமாகின்றது. இதனைத்தான் பூலோக தேவாமிர்தம் எனக் குறிப்பிடப்படுகிறது. ஆட்டுப்பால் பருகி வர மனஅழுத்தத்தை குறைக்கும். ஆயுளை வளர்க்கும் ஆட்டுப்பால் என்பதும் ஒரு அனுபவ மொழியாகும். என்புகள் சார்ந்த எந்தப்பிரச்சினை இருந்தாலும் ஆட்டுப்பால் அருந்தலாம் சித்த மருத்துவத்தில் தசைகளுக்கு வலுவூட்டும் மற்றும் தோல் நோய்களுக்கு பயன்படுத்தும் தைலங்களில் ஆட்டுப்பால் முக்கியமாக சேர்க்கப்படுகிறது. வலிப்பு நோயைத் தடுக்கத் தினமும் ஆட்டுப்பாலை அருந்தி வரலாம்.

பசு மற்றும் எருமைப் பாலில் லாக்டோஸ் அதிகம் உள்ளது. அதை உட்கிரகிக்கும் வலிமை அனைவருக்கும் இல்லை. இது சிலருக்கு லக்டோஸ் சகிப்புத் தன்மையில் சிக்கலை ஏற்படுத்துகிறது. இந்தப் பிரச்சினை உள்ளவர்கட்கு பாலை ஜீரணிக்க முடியாது. வயிற்றுப்போக்கு, வாந்தி, வயிறு உப்பிசம் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகிறது. ஆனால் ஆட்டுப்பால் குடிப்பதனால் இந்தப் பிரச்சினைகள் இல்லை. ஆட்டுப்பாலில் பசுப்பாலில் உள்ள அளவு கொழுப்பு உள்ளது. ஆனாலும் ஆட்டுப்பாலில் உள்ள கொழுப்பு எளிதில் ஜீரணமாகும்.

ஆட்டுப்பால் அருந்திவர உடலை மெலிவாக வைத்திருக்க உதவுகிறது. அத்துடன் உடலைச் சுறுசுறுப்பாகவும் மற்றும் வலிமை மிக்கதாகவும் உடலைப் பேண உதவுகிறது. ஆட்டுப்பாலில் அதிகப்படியான அவிகோ சர்க்ரைட்டு மாட்டுப்பாலை விட அதிகமாக உள்ளது. இவ் அவிகோ சர்க்கரைட்டு ஆனது புரோபயற்றிகளாக நன்மை செய்யும். பக்றீரியாக்களை பாதுகாத்து குடற்பகுதியில் ஆரோக்கியம் பாதுகாக்கப்படுகின்றது. ஆட்டுப்பாலில் லக்டோஸ் அதாவது இயற்கை சர்க்கரை அளவு குறைவாக உள்ளது. எனவே சர்க்கரை வேண்டாம் என நினைப்பவர்கள் ஆட்டுப்பாலை அருந்தலாம். அத்துடன் எளிதிலும் ஜீரணமாகக் கூடியதாகவும் இருக்கும். ஆட்டுப்பாலில் உள்ள பொட்டாசியம் சத்தானது இரத்த அழுத்தத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவுகிறது. முக்கியமாக மாதவிடாய் நின்ற பின்பு பெண்களுக்கும் என்புத் தேய்மானம் உள்ளவர்களும் ஆட்டுப்பால் பயன்படுத்துவது மேலும் சிறந்ததாகும்.

# இராசிபலன்

22.09.2025
புரட்டாதி 06, திங்கட்கிழமை
பிரதமை பின்னிரவு 2.36 மணிவரை

உத்தரம் பிற்பகல் 12.16 மணிவரை
சுப நேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7.32- 9.02 மணிவரை

நவராத்திரி விரதாரம்பம்

வளவன்




நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம்.




புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், ஒரு சில வேலைகளுக்காக சற்று அலைச்சல்கள் ஏற்படலாம், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம்.




மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதி கிடைக்கும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.




பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, அரசு வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.




விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பேச்சில் இனிமை தென்படும்.




வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், விருந்தினர் வருகையுண்டு, காரிய அனுகூலமுண்டு.




வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.




செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.




குடும்பத்தினருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், போசன சுகமுண்டு.




கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி அதிகரிக்கும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**புத்தகங்கள் இல்லாத வீடு உயிர் இல்லாத உடலைப் போன்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 870





"ஏன்? அடிக்கடி கேள்விப்பட்டுத்தான் வந்தேன். இளவரசுப் பட்டம் சூட்டிக் கொண்டதும், சுந்தர சோழர் மதுரைப் போர் முனைக்குப் போனார். நான் காசி க்ஷேத்திரத்துக்குச் சென்றேன். சில ஆண்டுகள் அங்கேயே தங்கி வேதாகம சாத்திரங்கள் பயின்றுவிட்டுத் திரும்பி வந்தேன்.

அப்போது பழையாறையில் ஈசான பட்டரின் தந்தை அந்தக் கரையர் மகளோடு அந்தரங்கமாக உரையாடிக் கொண்டிருந்ததைக் கண்டு வியந்தேன். அவர் ஒரு அதிசயமான செய்தியைச் சொன்னார். அந்தக் கரையர் மகள் பெரிய பிராட்டியின் அரண்மனைத் தோட்டத்தில் வந்து சில நாள் தங்கியிருந்ததாகவும், இரட்டைக் குழந்தைகள் பெற்று அங்கேயே போட்டுவிட்டு ஓடிப் போனதாகவும் கூறினார். எப்போதாவது நினைத்துக் கொண்டு குழந்தைகளைப் பார்ப்பதற்காக அவள் இரகசியமாக வருவதுண்டு என்றும் தெரிவித்தார்.

குழந்தைகள் என்ன ஆயின என்று கேட்டேன், அவர் சொல்ல மறுத்து விட்டார். அது செம்பியன் மாதேவிக்கு மட்டுமே தெரிந்த இரகசியம் என்று கூறினார். நானும் அதைப்பற்றி அதிகம் கிளறாமலிருப்பதுதான் நல்லது என்று சும்மா விட்டு விட்டேன். தேவி! அருள்மொழி குழந்தைப் பிராயத்தில் காவேரி நதியில் விழுந்து விட்டபோது, அவனைக் காவேரி அன்னை காப்பாற்றினாள் என்று எல்லாரும் சொல்லுவார்கள் அல்லவா? அப்படிக் காப்பாற்றியவள் உண்மையில் கரையர் மகள்தான் என்று என் மனத்தில் அச்சமயமே தோன்றியது."

"தங்கள் உள்ளத்தில் தோன்றியது உண்மைதான், ஐயா! அருள்மொழி ஈழ நாட்டில் அந்த மாதரசியைப் பார்த்து விட்டு வந்து அவ்வாறுதான் சொன்னான். ஆனால் இந்த விந்தையைக் கேளுங்கள்! என் தந்தை என்ன எண்ணுகிறார் தெரியுமா? கடலில் விழுந்து இறந்த கரையர் மகள்தான் ஆவி வடிவத்தில் வந்து தம் மக்கள் மீது பழி வாங்குவதாக எண்ணுகிறார்.

நேற்றிரவு வெளியில் கடும் புயல் அடித்தபோது என் தந்தையின் உள்ளப் புயலும் வேகத்தை அடைந்தது. இரவு முழுவதும் அவர் தூங்கவே இல்லை என்னையும் தூங்க விடவில்லை. பழைய கதைகளையெல்லாம் மறுபடி சொன்னார். 'கடலில் விழுந்து இறந்த அந்தப் பழிகாரிதான் இப்போது என் பேரில் பழி வாங்குகிறாள். அவள்தான் என் அருள்மொழியைக் கடலில் மூழ்க அடித்துக் கொன்று விட்டாள்! கரிகாலனையும் அவள் பழி வாங்காமல் விடமாட்டாள்!' என்று அடிக்கடி அலறினார்.

'என் ஒரு மகனாவது உயிரோடிருக்கும்போது என்னைக் கொண்டு போக மாட்டாயா, யமனே!' என்று கதறினார். அவருக்கு எவ்வளவோ நான் சமாதானம் சொல்லியும் கேட்கவில்லை. அதன் பேரிலேதான் நாகைப்பட்டினம் புத்த விஹாரத்தில் அருள்மொழிவர்மன் பத்திரமாயிருப்பதைப் பற்றி அவரிடம் சொல்ல வேண்டி நேர்ந்தது" "அதற்குப் பிறகு சக்கரவர்த்தி சிறிது ஆறுதல் அடைந்தாரா?"

"அதுதான் இல்லை. அதன் பிறகு சித்தப்பிரமை இன்னும் அதிகமாகிவிட்டது! முதலில் அச்செய்தியை அவர் நம்பவே இல்லை. ஆனால் நேரில் பார்த்து விட்டு வந்தேன் என்று சொன்ன பிறகு நம்பினார். ஏன் அவனை அழைத்துக் கொண்டு வரவில்லை என்று கேட்டார். (தொடரும்...)



## சிறுவர் அரங்கம்

### புதியதாக வந்த நட்பும், உதவியும்



(நேற்றைய தொடர்ச்சி)

நரிக்கு அடடா அவசரப்பட்டுட்டமே, என்று நினைத்து, அப்படி எல்லாம் வேண்டாம். நீங்க சாப்பிட்டது போக மிச்சம் கொடுத்தா போதும் என்று சொல்லி புலியை சந்தோசப்படுத்தியது. புலியும் ஒத்துக் கொண்டது.

நரியின் திட்டப்படி, அந்த காட்டில் ஒரு பெரிய குழி ஒன்று இருந்தது. அந்த குழியை அங்குள்ள இலை தழைகளால் கொண்டு மூடி விட்டது. ஒரு பெரிய மரக் கிளையை இழுத்து வந்து பக்கத்தில் வைத்துக்கொண்டது. மறுநாள் மாடுகள் வருவதை மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தது.

வழக்கம் போல மாடுகள் ஒவ்வொரு இடமாக மேய ஆரம்பித்தன. ஒளிந்திருந்து பார்த்துக்கொண்டிருந்த நரி அந்த நாயின் கண் படாத தொலைவு ஒரு மாடு மேய்ந்து கொண்டு வருவதை கவனித்து மெல்ல அருகில் வந்து நண்பா இந்த காய்ந்த புல்களைத்தான் தினமும் மேய்கிறாயா? என்று கேட்டது. யார் என நிமிர்ந்து பார்த்த மாடு, நரியிடம் என்ன செய்வது இந்த இடங்களில் புற்கள் காய்ந்து விட்டன.

தள்ளி போய் மேயலாம் என்றால் இந்த நாய் விடுவதில்லை, இப்பொழுது கூட உன்னிடம் பேசிக்கொண்டிருப்பதை பார்த்தால் பாய்ந்து வந்து விடும், அது இந்த இடத்தை விட்டு வேறு இடத்தில் மேய்ந்தால் ஆபத்து வரும் என்று சதா கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறது.

என்ன செய்வது என்று அலுத்துக் கொண்டது.

நீ மட்டும் சரி என்று சொன்னால் இதை விட அழகான பச்சைப் பசேல் என்ற புல் வெளியை காட்டுகிறேன் என்றது, ஐயையோ, நாயார் என்னை விட மாட்டாரே என்று மாடு சொன்னது. அதைப் பற்றி கவலைப்படாதே. நாளை இதே போல் வா, வந்தவுடன் எல்லோரையும் போல மேய்ந்து கொண்டே இந்த இடத்துக்கு வா. உன்னை அங்கு அழைத்துப்போகிறேன், உனக்கு வேண்டியதை மேய்ந்துவிட்டு மாலைக்குள் இங்கு வந்து விடு, என்றது. மாட்டுக்கு ஒரே மகிழ்ச்சி, நாளை பசும்புல் சாப்பிடப்போகிறேன், என்று நினைத்தது.

அன்று மாலையே நரி புலியிடம் போய் நீங்கள் அந்த குழியில் ஒளிந்து கொள்ளுங்கள், அந்த குழியினை இலை தழைகளால் மூடி விடுகிறேன். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதை வயதைப் பொறுத்து வருவதில்லை.
அவர்கள் செய்யும் செயலைப் பொறுத்தே வருகிறது.
- அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## திட்டமிட்ட ஒழுங்கில் சிலைகளை நிறுவுங்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் அமரர் அ.துரைராஜா அவர்களுக்கு திருநெல்வேலியில் சிலை நிறுவுவதென நல்லூர்ப் பிரதேச சபை தீர்மானம் எடுத்துள்ளது.

நல்லூர்ப் பிரதேச சபை எடுத்த தீர்மானம் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.

பொதுவில் எங்கள் மண்ணில் அளப்பெரும் சேவையாற்றி மறைந்தவர்களைக் கௌரவிக்கின்ற கடமை நமக்கு உண்டு.

அந்த வகையில் சமயம், மொழி, கல்வி பண்பாடு, அரசியல், சமூகவியல் எனப் பல் துறைகளில் பெரும்பணியாற்றி எங்கள் தமிழினத்துக்குப் பேருதவி புரிந்தவர்கள் பலர்.

எனவே அத்தகையவர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு உருவச்சிலை நிறுவி அவர்களின் தன்னலமற்ற சேவைக்கு நன்றி தெரிவிக்கின்ற கடமைப்பாடு எமக்கு உண்டு என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது.

எனினும் எங்கள் மண்ணில் உருவச்சிலைகளை நிறுவுவதில் நாம் பின்னடைவிலேயே இருக்கிறோம் என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

பொதுவில் யாழ்ப்பாண நகரத்தில் வள்ளுவர், ஔவையார், மகாத்மா காந்தி ஆகியோருக்கு சிலை வைக்கப்பட்டன. இந்தக் கைங்கரியத்தை மில்க்வைற் தொழிலதிபராக இருந்த கலாநிதி க.கனகராஜா அவர்கள் செய்திருந்தார்.

இதேபோல நல்லூர் அரசடிச் சந்தியில் பாரதியார் சிலையும் நல்லூர் முத்திரைச் சந்தியில் சங்கிலிய மன்னனின் சிலையும் நிமிர்ந்து நிற்கின்றன.

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் அறிஞர் அண்ணாவுக்கும் எம்.ஜி.இராமச்சந்திரனுக்கும் சிலை நிறுவப்பட்டது.

இதுபோல யாழ்ப்பாணம் மடத்தடியில் தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாருக்கு சிலை அமையப் பெற்றுள்ளது.

இவற்றுக்கும் மேலாக, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் சிலைகள் முக்கிய இடங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

இங்கு நாம் கூறவருவது, முதன்மைக்குரியவர்களுக்கான சிலைகளை நிறுவுவதற்குப் பொதுவான இடத்தைத் தெரிந்தெடுத்து, அந்த இடத்தில் சிலைகளை நிறுவும்போது அது மற்றவர்களின் கவனத்துக்குரியதாகவும் அமையும்.

ஆம், யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை யாழ்ப்பாணம் கோட்டையின் தென்பகுதிக் கடலோரம் சிலைகளை நிர்மாணிப்பதற்குப் பொருத்தமான இடமாக உள்ளது.

அதாவது முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜா அவர்களின் சிலையை நல்லூர் பிரதேச சபை நிர்மாணிப்பதாக இருந்தாலும் யாழ்.கோட்டையின் தென்புறத்துக் கடலோரமாக அச்சிலையை நிறுவுவதுதான் பொருத்துடையது.

இதுபோல திருநெல்வேலி மண்ணில் வாழ்ந்த பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை மற்றும் யாழ்.பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் மற்றும் தமிழ் அரசியல் தலைவர்கள் ஆகியோரின் சிலைகளையும் ஒரே இடத்தில் நிறுவும் போது, அது மிகுந்த ஈர்ப்பை ஏற்படுத்துவதுடன் சிலை நிர்மாணிப்பதில் ஒரு நடுநிலைத் தன்மையும் பேணப்படும்.

ஆகையால் இது தொடர்பில் நம்மவர்கள் கூடி ஆராய்ந்து, திட்டமிடலும் ஒழுங்குபடுத்தலும் உடையதாக சிலை நிர்மாணிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே நம் தாழ்மையான கோரிக்கை.

# எமக்குள் ஒற்றுமை ஏற்படாவிட்டால் மாற்றுக் கட்சிகளே எம் மாகாண சபைகளை ஆளும்

## எச்சரிக்கிறார் செல்வம் அடைக்கலநாதன்

(வவுனியா)

வடக்கு, கிழக்கு மாகாணசபை மாற்றுக் கட்சிகளின் அதிகாரங்களிற்குள் செல்கின்ற நிலைமை ஏற்பட்டால் தமிழ்த் தேசியத்தை பற்றிப் பேசுகின்ற தமிழ்க் கட்சிகள் அத்தோடு கடையை மூடிவிட்டு செல்லும் நிலை ஏற்படும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் அமைந்துள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

மாகாணசபைத் தேர்தலினை நடத்த வேண்டும் என்று எல்லோரும் கோரிக்கை விடுகின்ற இச்சந்தர்ப்பத்திலே அதிகாரப் பரவலாக்கலின் ஊடாக மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று இந்தியாவும் ஐ.நா சபையிலே கோரிக்கையினை முன்வைத்துள்ளது.

இதேவேளை மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் என்றால் எல்லாக் கட்சிகளும் ஒன்றிணைந்து குறித்த தேர்தலில் பங்குகொள்ள வேண்டும் என்று இந்தியத் தூதுவரும் கோரிக்கையினை முன்வைத்துள்ளார்.

குறித்த விடயமானது ஒரு நியாயமான விடயமாக நான் பார்க்கின்றேன். எங்களைப் பொறுத்த வரையில் ஒற்றுமை இன்மையைக் கடந்த பாராளுமன்றத் தேர்தலிலே நாங்கள் அனுபவித்திருந்தோம். குறிப்பாக எமது ஒற்றுமை இன்மையினால் தமிழ் மக்கள் விரக்தியடைந்துள்ளனர்.

இதன் காரணமாகவே மக்கள் யாருக்கு வாக்கு போடுவது என்ற குழப்பத்தில் இருந்தனர்.

மேலும் இவ் ஒற்றுமை இன்மையினாலேயே புதிய நபரை, புதிய அரசைத் தெரிவு செய்ய வேண்டும் என்ற ரீதியிலேயே பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் வாக்களித்திருந்தனர்.

இதன் காரணமாகவே முன் எப்போதும் இல்லாத வகையில் வடக்கு கிழக்கு பகுதிகளில் தேசியக் கட்சிகளின் பிரதிநிதித்துவம் உருவாகியது.

குறிப்பாக எமது செயற்பாடுகள் வெறுமன பேச்சளவில் காணப்படுமேயானால் எமது மாகாணசபை நிச்சயமாக மாற்றுக் கட்சிகளின் அதிகாரங்களுக்குள் செல்கின்ற வாய்ப்பு ஏற்படும். அவ்வாறு ஏற்பட்டால் தமிழ்த் தேசியத்தை பற்றிப் பேசுகின்ற தமிழ்க் கட்சிகள் அத்தோடு கடையை மூடிவிட்டுச் செல்லும் நிலை ஏற்படும்.

எம் மக்களுடைய எதிர்காலம், இனப் பிரச்சினைக்கான மற்றும் எமது மண் பறிபோகாமல் இருக்க வேண்டும் என்றால் அதற்காக நாங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

ஐ.நாவிற்கு கடிதம் எழுதும் போதோ அல்லது கையொப்பம் இடுகின்ற சந்தர்ப்பத்தின் போதோ ஒற்றுமையாக இருக்கின்ற தமிழ்க் கட்சிகள், தேர்தல் காலத்தில் மாத்திரம் ஒற்றுமையாக இருக்காமல் பிரிந்து செல்லுகின்ற அபாய நிலை இருக்கின்றது.

எனவே ஒற்றுமையாக மக்களுடைய எதிர்பார்ப்பை நிறைவு செய்கின்ற கட்சிகளாக நாம் இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (ந-7)

## கெஹெல் பத்தரவே நாட்டில் இடம்பெறும் போதைவஸ்து கடத்தலின் பிரதான சூத்திரதாரி

(கொழும்பு)

இந்தோனேஷியாவில் கைது செய்யப்பட்டு நாட்டிற்கு அழைத்துவரப்பட்ட கெஹெல்பத்தர பத்மே நாட்டில் திட்டமிடப்பட்ட குற்றச்செயல்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்செயற்பாடுகளின் பிரதான குற்றவாளி என விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதி மன்றுக்கு அறிவித்துள்ளது.

இந்தோனேஷியாவில் கைது செய்யப்பட்டு நாட்டிற்கு அழைத்து வரப்பட்ட கெஹெல் பத்தரே பத்மே நீதிமன்ற உத்தரவிற்கமைய 90 நாட்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அந்த வகையில் தற்போது குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் தடுப்புக்காவலில் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ள கெஹெல்பத்தர பத்மே மீதான விசாரணையின் இரகசிய அறிக்கை ஒன்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் கொழும்பு மேலதிக நீதவான் லஹிரு சில்வா முன்னிலையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

அத்துடன் குறித்த விசாரணைகளூடாக ஆயுதங்கள், வெடிபொருட்கள் சேகரித்தமை திட்டமிடப்பட்ட குற்றக் குழு வலையமைப்புடன் தொடர்புடைய பல தகவல்கள் வெளியிடப்பட்டிருந்ததாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் நீதிமன்றுக்கு அறிவித்திருந்தனர்.

சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணும் உயர் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உயர்மட்ட அரச அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்தமை போன்ற செயல்களிலும் தொடர்புபட்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

அத்துடன் கணேமுல்ல சஞ்சீவ கொலையுடன் கெஹெல்பத்தர பத்மே தொடர்புபட்டுள்ளாரா? என்பது குறித்து மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் நீதிமன்றுக்கு அறிவித்தனர்.

அத்துடன் கெஹெல் பத்தர பத்மே இந்த நாட்டில் திட்டமிடப்பட்ட குற்றச்செயல்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்செயற்பாடுகளின் பிரதான நபர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது. (ந-7)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் படுகொலை

ஹெம்மாத்தகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட குடும்பத் தகராறு காரணமாக ஏற்பட்ட முரண்பாட்டினால் இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் தெவனகல பகுதியினைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவரின் சடலம் ஹெம்மாத்தகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன்,

சம்பவத்துடன் தொடர்புடையவர் எனும் சந்தேகத்தில் 23 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந-7)

## போதைவஸ்து உற்பத்தி இடம் சுற்றிவளைப்பு


(வெலிகம)

வெலிகம பகுதியில் ஐஸ் போதைப்பொருள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் இடம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு வெளிநாட்டுப் பிரஜையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐஸ் போதைப்பொருள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மெத்தம்பெட்டமைனும் அந்த இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நபர் 18 வயதான மொல்டா நாட்டைச் சேர்ந்தவர் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் வாயிலாகத் தெரியவந்துள்ளது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

### பகுதி VI

06

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

1938 இல் விமான தபாற் சேவை ஆரம்பமாயிற்று.

**கொழும்புத் துறைமுகத்தின் அபிவிருத்தி:**

14 ஆம் நூற்றாண்டில் அராபிய வர்த்தகர்கள்தான் முதன் முதல் கொழும்பை ஒரு பிரதான துறைமுகமாக உபயோகிக்கத் தொடங்கினர் எனச் சரித்திரம் கூறும். 1330 இல் இலங்கையைத் தரிசித்த இபன் பத்தூத்தா கொழும்பை, "செரன்டிப் தீவின் அதி பெரியதும் சிறந்ததுமான நகரங்களில் ஒன்று" என வர்ணித்தார்.

ஒரு நூற்றாண்டுக்குப்பின் இலங்கையில் கால்வைத்த போர்த்துக் கேயர், தமது முதற் கோட்டையைக் கொழும்பில் தான் அமைத்தனர். அவர்களது முயற்சிகளின் பயனாக கறுவா, யானைத் தந்தம், இரத்தினக் கற்கள் போன்ற பொருட்களின் வியாபாரத்துக்கு கொழும்பு ஒரு மத்திய தானமாக விளங்கியது.

கறுவாவை சேகரிப்பதற்குப் பல பண்டக சாலைகள் அமைக்கப் பெற்றன. எனினும் அக்காலத்திலும் அதன் பின்பும் காலி தான் இலங்கையின் பிரதான துறைமுகமாகத் திகழ்ந்தது. ஒல்லாந்தர் காலத்தில், கொழும்பின் முக்கியத்துவம் அதிகரித்த போதிலும், அதன் உருவம் மாறவில்லை.

இத்துறையின் வழியாக கறுவா, அரிசி, புடவை வகை, பாக்கு, யானைகள் முதலாய பொருட்கள் ஏராளமாக ஏற்றி இறக்குமதி செய்யப் பெற்றன. டிபியர் (De Beer) என்ற டச்சுப் பொறியியலாளர் கொழும்பு வாவியை ஒரு முக்கியத்துவம் வாய்ந்த உள்நாட்டுத் துறைமுகமாக்கினர். பல பாதைகளும் கால்வாய்களும் அதனைச் சூழவர இணைக்கப்பட்டன.

ஆங்கிலேயர் காலத்தில் தான், கொழும்புத் துறை முகம் தற்கால முக்கி யத்துவம் பெறத் தொடங்கிற்று. நீண்ட கால அமைதியும், பொருளாதார விருத்தியும், கொழும்புக்கு முன்னேற்றத்தைக் கொணர்ந்தன. சுற்றுப் புறங்களின் செல்வாக்கினால் கொழும்பு துரிதமாக விருத்தியடைந்தது. அதன் வழியாகவே கோப்பி உற்பத்தி முழுவதும் ஏற்றுமதி செய்யப்பட்டது.

தெருக்கள், புகையிரத வீதிகள், தபாற் சேவைகள் என்பவை அதனைக் கோப்பிப் பிரதேசங்களுடனும், புதுக் குடியிருப்புக்களுடனும் இணைத்தன. சுற்றுப்புறம், ஏற்றுமதிக்கான பொருட்களை உற்பத்தி செய்ததுமன்றி நுகர்ச்சிப் பொருட்களுக்கான சந்தையையும் ஏற்படுத்தியதன் பயனாக, கொழும்புத் துறைமுகத்தின் வர்த்தகம் அதிகரித்தது.

எனினும் கொழும்புத் துறைமுகம் பொருளாதார விருத்திக்கேற்றவாறு விருத்தி செய்யப் பெறவில்லை. அவுஸ்திரேலியாவுக்கும் தூர கிழக்கு நாடுகளுக்கும் பிரயாணம் செய்த கப்பல்கள் காலித்துறையையே பயன்படுத்தின.

கொழும்புத் துறையினூடாக நடைபெற்ற வர்த்தகத்தின் பயனாக அதன் சுற்றாடல் வேகமாக மாற்றமடைந்தது. கோப்பி வர்த்தகர், வர்த்தகக் கம்பனிகளைக் கொழும்பில் நிறுவியதுமன்றி பல மில்களையும், பண்டகசாலைகளையும் அமைவு பெறச் செய்தனர்.

கோப்பிக் குப்பின் தேயிலை உயர்வடைந்த பொழுது, தேயிலை ஏற்றுமதிக் கம்பனிகள் பல நிறுவப்பட்டன. அதே போன்று கொக்கோ, தேங்காய், இறப்பர் போன்ற ஏற்றுமதிப் பொருட்களுக்கும் பல வர்த்தகக் கம்பனிகள் கொழும்பில் ஸ்தாபிக்கப்பட்டன.

இறக்குமதிப் பொருட்களுக்கும் கொழும்புத் துறையே முக்கிய தானமாக விளங்கியதனால் இறக்குமதியான உணவுப் பொருட்கள் என்பனவற்றுடன் சம்பந்தப் பட்ட தொழில் வர்த்தக நிலையங்களும் கொழும்பில் பெருகின.

1869 இல் சுவெஸ் கால்வாய் பூர்த்தியாக்கப்பட்டதும், தூர கிழக்கு நாடுகளுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் செல்லும் கடற் பாதைகள் பிரியுமிடத்தில் கொழும்பு இடம் பெற்றதனால், அதன் சிறப்பு பன்மடங்கு அதிகரித்தது.

காலித் துறைமுகம் இதற்கு ஏற்றதாகவிருக்கவில்லை. பாதுகாப்பும் இடவசதியுமுள்ள ஒரு துறைமுகம் இலங்கைக்கு இன்றியமையாததென யாவரும் உணர்ந்தனர். 1871 இல் இலங்கைச் சட்டசபை கொழும்புத் துறைமுகத்தில் அணையொன்றினைக் கட்டும் திட்டத்தை அங்கீகரித்தது.

அணை வேலை, 1874 இல் ஆரம்பித்து 1884 இல் முடிவெய்தியது. தென் மேற்குப் பக்கமாக இவ்வணை 1350 அடிக்கு, 50 அடி அகலமாகவும், மிகுதி 2882 அடிக்கு 40 அடி அகலமாகவும், மோதும் அலைகளுக்கு மேலாக 9 அடி உயரத்திலும் அமைக்கப்பெற்றது.

இங்ஙணம் கொழும்புத் துறைமுகம் பெற்ற பாதுகாப்பினால், அஃது இந்தியச் சமுத்திரத்திலேயே முதன்மை பெற்றது. பல புதுக் கப்பல்கள் அதனை உபயோகிக்கத் தொடங்கின.

1880ற்குப் பின் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி அதிகரிக்கவே, கப்பல்களின் போக்குவரத்து அதிகரித்தது. மேலும் அதிகமான கப்பல்களுக்கு இடங் கொடுக்க வேண்டிய நிலை எழவே, கூடுதலான பாதுகாப்புத் தேவையாயிற்று. வடகிழக்கிலும், வடமேற்கிலும் மேலும் ஈர் அணைகள் கட்டப்பட்டு 1898 இல் பூர்த்தியாயின.

இதன் பயனக நீர்ப் பரப்பின் அளவு 643 ஏக்கராக விரிவடைந்ததுமன்றி, இரு பருவப் பெயர்ச்சிக் காற்றுக்களிலுமிருந்து பாதுகாப்புக் கிடைத்தது. ஆள்பதி வெஸ்ற் றிஜ்வே "கொழும்பு உலகத்திலேயே அதி சிறந்த செயற்கைத் துறை முகத்தைக் கொண்டது" எனக் கூறினார்.

1900 அளவில் கொழும்புத்துறைமுகம் "Clapham Junction of the East" என வர்ணிக்கப்பட்டது. ஐரோப்பாவினின்று அவுஸ்திரேலியா, தூர கிழக்கு, இந்தியா, பர்மா, மலாயா எனும் நாடுகளுக்குச் செல்லும் கப்பல்கள் யாவும், அதனைப் பிரதான துறையாகப் பாவிக்கத் தொடங்கின.

அதன் மத்திய கேந்திரநிலையத்தின் பேறாக, கொழும்பு முதலாம் மற்றும் இரண்டாம் போர்களிலும் பெரும் பங்கு கொண்டது.

**நடுத்தர வகுப்பினர் தோற்றம் பெறல்**

பிரித்தானிய அரசாங்கம், அதன் ஆட்சியின் ஆரம்பம் தொட்டு இலங்கையில் இருந்து வந்த சமூக அமைப்புக்கள், நியதிகள், ஒழுங்குகள், கட்டுப்பாடுகள் என்பனவற்றை வன்மையாகக் கண்டித்து வந்தது. சாதிக்கேற்ற தொழில், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்காத அரசியல் முறை, கூலியாட்களின் இடப்பெயர்ச்சிக்கு வாய்ப்பு கொடுக்காத பொருளாதாரம் எனும் நிலைகள், அவர்களுடைய கொள்கைகளுக்கு முற்றிலும் முரண்பட்டவையாக இருந்தன.

நாட்டின் இயற்கை வளங்களை விருத்தி செய்து அரசாங்கத்தின் இறை வருமானத்தைப் பெருக்க நோக்கம் கொண்ட பிரித்தானியருக்கு இவை பெரும் இடையூறுகளாக அமைந்தன. எனவே பிரித்தானிய அரசாங்கம் 1832 இல், இராசகாரிய முறையினை ஒழித்தபொழுது, ஒவ்வொரு மனிதனும் தான்விரும்பிய தொழிலை தெரிந்தெடுக்கும் வாய்ப்பினைப் பெற்றான்.

அடுத்து, பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை ஆதரித்த அரசாங்கம், சமுதாய வாழ்வை வர்த்தக முறைக்கு மாற்றவும் உதவியது. அது, முடிக்குரிய நிலங்களைக் குறைந்த விலைக்கு விற்றும், பெருந்தோட்டங்களை நில வரியினின்று நீக்கியும், இறைவருவாயின் பெரும் பகுதியை தோட்டங்களுக்குத் தெருக்களை அமைக்க உபயோகித்தும், வர்த்தகத்தை ஊக்குவித்தது.

இம்மாற்றங்கள், ஐரோப்பிய முதலீட்டையும் தோட்டத் துரைமாரையும் இந்நாட்டுக்கு வரவழைத்ததுமன்றி நாட்டின் சமூக அமைப்பிலும் ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்த உதவின. பிரித்தானியர் இலங்கையை வெற்றி கொண்ட பொழுது, அஃது ஒரு கிராமிய நாடாக இருந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மின்சாரக்...

மின்சாரக் கட்டண உயர்வுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை அங்கீகரிக்கப்படுமானால், 7.2 மில்லியனுக்கும் அதிகமான பயனாளிகள் பாதிப்படைய உள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

இதுவரை இந்தக் காலாண்டில் மின்சார சபைக்கு 7.83 பில்லியன் ரூபாய் நிதிச் செலவுகள் ஏற்பட்டுள்ளது.

இது கடந்த ஜூன் மாதத்துடன் ஒப்பிடும்போது 2.48 பில்லியன் ரூபாயால் அதிகரித்துள்ளது.

அதற்கமைய குறித்த கோரிக்கை தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தற்போது மக்களின் கருத்துக்களையும் பெற்றுப் பரிசீலித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7)






















## துப்பாக்கிகளூ...

நேற்றைய தினம் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு திம்பிலியில் உள்ள வீடு ஒன்றில் சட்டவிரோதமாகத் துப்பாக்கிகள் மூன்றினை மறைத்து வைத்திருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலினையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் மூலம் குறித்த துப்பாக்கிகள் மீட்கப்பட்டதுடன் அதனைத் தமது வீட்டில் வைத்திருந்த குற்றச்சாட்டில் வீட்டின் உரிமையாளரான இளம் குடும்பஸ்தர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் விசாரணைகளின் பின்னர் இன்று சந்தேக நபர் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார். (ந-7,299)

## பெறுமதியான...

விறகுக்குள் மறைத்து பெறுமதியான மரங்களைக் கடத்த முற்பட்ட நபர் ஒருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளதுடன், மரக்குற்றிகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

சாவகச்சேரி பொலிஸார் கைதடிப் பகுதியில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை வீதியால் சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணித்த சிறிய ரக பாரவூர்தி ஒன்றினை வழிமறித்து சோதனையிட்டனர்.

அதன்போது வாகனச் சாரதி தான் விறகுகளை ஏற்றிச்செல்வதாகக் கூறிய போது, பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டு, சாரதியைக் கைது செய்து, வாகனத்துடன் பொலிஸ் நிலையம் கொண்டு சென்று வாகனத்தினுள் இருந்த விறகுகளைக் கீழே இறக்கி சோதனை செய்தவேளை விறகுகளுடன் பெறுமதியான பாலை மற்றும் முதிரை மரக்குற்றிகளைக் கடத்திச் செல்வது கண்டறியப்பட்டுள்ளது.

அதனை அடுத்து சாரதியை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணைகளின் பின் சாரதி இன்று சாவகச்சேரி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (ந-7,33)

## ஈஸ்டர் தாக்கு...

பட்டது.

தொண்டு நிறுவனங்களின் சார்பாக உரையாற்றிய சுராஜ் நிலங்க, தாக்குதல் நடத்தியவர்களுக்கு அப்பால் 260க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட பேரழிவுக்குக் காரணமான குண்டு வெடிப்புகளுக்குப் பொறுப்பான அனைவருக்கும் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என வலியுறுத்தியதுடன் முழுமையான, சுயாதீனமான மற்றும் விரைவான குற்றவியல் விசாரணையையும் கோரினார்.

அத்துடன் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வருடமாகின்ற போதிலும் பொறுப்புக்கூறலுக்கான நம்பிக்கைகள் மங்கி வருவதாகவும், தாக்குதலின் மூளையாகச் செயற்பட்டவர்கள் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை என்றும், தொடர்ச்சியான விசாரணைகள் "கடுமையான குறைபாடுகளால்" சிதைக்கப்படுவதாகவும் கவலை வெளியிட்டார்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட கிறிஸ் தவரல்லாத சிலரில் பௌத்தரான தனது மகன் விஹஙகவும் அடங்குவதாகத் தெரிவித்த அவர், ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஏற்படுத்திய காயங்கள் ஆறவில்லை என்பதையும், உலக அரங்கில் நீதிக்கான கோரிக்கை வலுப்பெறுகிறது என்பதனையும் சுட்டிக் காட்டினார். (ந-7)

## அதிகாரமும்...

நாடும் அழகான வாழ்க்கையும் எனும் தொனிப்பொருளில் தேசிய உள்ளூராட்சி வாரத்தின் இறுதி நாள் நிகழ்வும் பரிசில் வழங்கும் நிகழ்வும் நேற்று கிளிநொச்சி மாவட்ட திறன் விருத்தி மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த காலங்களில் அதிகார மும்மதையுடனும் இருந்த பல ரை காலம் காணாமல் ஆக்கியுள்ளது. குறிப்பாக ஜே.ஆர், பிரேமதாஸ, சந்திரிகா, மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ என எல்லோருமேசொன்ன வார்த்தைகள் என்ன? எல்லோருமே இன்று இல்லை!

அநுர அரசு நினைப்பது போன்று இந்த நாட்டை கொண்டு செல்ல முடியாது. காலம் சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கின்றது.

அதனை யார் சரியாகப் பயன்படுத்தத் தவறுகிறார்களோ காலம் அந்தத் தண்டனையை தந்தே தீரும் என்றார்.


கரைச்சிப் பிரதேச சபையினுடைய தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுப்பிரமணியம் முரளிதரன் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கிளிநொச்சி பிராந்திய பொலிஸ் அதிகாரி, பிரதேச சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ந-7,315)

## மின்சார சபை...

நள்ளிரவு முதல் கொள்முதல் மற்றும் டெண்டர் செயன்முறைகளில் விலகவுள்ளதாக இலங்கை மின்சார சபை தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு செயற்பாட்டில் முறைசாரா முன்மொழிவுகள், ஊழியர்களுக்குப் பெரும் சிரமத்தை ஏற்படுத்தும் சட்டவிரோத நடவடிக்கைகள், நிலுவையில் உள்ள ஊக்கத்தொகையை வழங்குதல் மற்றும் உரிய பதவி உயர்வுகளை வழங்குதல் உள்ளிட்ட 16 கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் இந்த தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(C-288)



## காயத்திரி திருமண சேவை

சகல விதமான திருமண பொருத்தங்களும் பார்க்கப்படும்.
அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.
உரும்பிராய்
**077 844 9861**
(5476)



## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- முதல் 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-3931)

**V2 TRAVELS** 076 1410725, 076 8226236
v2vacancies@gmail.com



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3933)

**076 825 7716** (ஆகாஸ்)



## Smart Better English & Music

GRADE : 1 - 5 , 6-11

ADVANCED LEVEL & GENERAL ENGLISH

BASIC , INTERMEDIATE ADVANCED ENGLISH COURSES

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்கள், பாடசாலைக் கல்வி முடித்தவர்கள், வெளிநாடு செல்ல இருப்பவர்கள் எல்லோருக்குமான பேச்சுப்பயிற்சி ஆங்கிலம் /Spoken English மற்றும்

IELTS கற்க விரும்புவர்கள்

Keyboard (ஓகன்) Guitar (கிற்றார்) Piano (பியானோ) Violin(வயலின்) Vcoal (Music சங்கீதம்) மிருதங்கம் வகுப்புக்கள் நடைபெறுகின்றன

(5458)



Keyboard (ஓகன்) Piano (பியானோ) London Trinity College பரீட்சைக்கு தோற்ற முடியும்

Library Facility , English Club Available

தொடர்புகளுக்கு : 0743784583 / 0777110523


# இளைஞன் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம் நாவற்குழிப் பகுதியில் இளைஞன் ஒருவரது சடலம் சுருக்கிட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

நாவற்குழி முந்நூறு வீட்டுத்திட்டப் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-7,30)

# யாத்திரிகர் பேருந்தை தாக்கிய யானை

சிதுல்பவ்வ - கிரிந்த வீதியில் நேற்று (21) காலை யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்தின் மீது யானை ஒன்று தாக்குதல் நடத் தியுள்ளது.

இதன்போது ஓட்டுநர் துரித நடவடிக்கை எடுத்துப் பேருந்தை முன்னோக்கிச் செலுத்தியதால் பேருந்து சேதமடைந்த போதிலும் தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)


## மாப்பிள்ளை தேவை

01. சுழிபுரம், இந்து, 1997, சித்திரை, MBBS, MD, Doctor பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
02. பருத்தித்துறை - அல்வாய், 1996, இந்து, அவிட்டம், Bsc, Msc, Norway பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
03. இருபாலை, 1993, இந்து, திருவோணம், Masters, Germany citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
04. புங்குடுதீவு, 1997, இந்து, அவிட்டம், Bsc, Canada பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
05. தம்பசிட்டி, 1998, இந்து, மகம், Bachelors, UK citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
06. திருநெல்வேலி - புங்குடுதீவு, இந்து, 1996, ரோகிணி, Civil Engineer, Canada பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
07. அளவெட்டி, 1997, இந்து, மூலம், Bachelors, UK citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
8. மானிப்பாய், 1993, இந்து, ஆயிலியம், MBBS, Doctor, Australia citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
9. சாவகச்சேரி, 1990, இந்து, உத்திரட்டாதி, Graduate, Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
10. காரைநகர், 1992, இந்து, மிருகசீரிடம், Masters, Australia citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.

நீங்களாகவே எமது website www.thaalee.comஇல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

(1576)

S.Sharma J.P www.thaalee.com **077 539 3728**



## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையில் k.k.s வீதியில் இருந்து 100m ல் 1 ½ பரப்பு, 1 ¾ பரப்பு மற்றும் 2 பரப்புக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளது.

(5329)

**076 663 3199**



## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். கோப்பாய் இராசபாதை வீதியில் றெஜினிங் கொலிஜ்க்கு முன்பாக 14 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரித்து 20 அடிப் பாதையுடன் விற்பனைக்கு உண்டு குடியிருப்புச் சூழல், நல்ல நீர்க்கிணறு, செம்மண் தரைக் காணி.

பார்வையிடும் நேரம் :- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

பிரதான போக்குவரத்துச் சேவை பஸ் செல்லும் வீதி முன்பாக

தொடர்புகளுக்கு : விமல்

**076 755 8606, 077 638 5683**

(C-3934)



## வேலையாட்கள் தேவை

வவுனியாவில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை.

(1568)

**076 889 1308**
**077 839 3974**



## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் வீட்டு அலங்கார மரங்கள் மற்றும் பூச்சாடி விற்கும் கடையொன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு :

**074 208 2010**

(5482)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாப ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.